இப்படைத் தோற்கின், எப்படை வெல்லும்?

Phone No. 4502 Regd. No. M. 5458

விலை அணு ஒன்று] [இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிட தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (20—12—49) வெளியூர் (21—12—49) [இதழ் 121

பகுத்தறிவாளர் மாநாட்டில் போராட்ட சக்திகள் திரண்டன!

மௌடிகத்தை முறியடிக்க, மனிதவுரிமை தாரீரோ!

சிந்தனைக் கலைக்கூடங்களில் சீரழிக்கும் மதக் கல்வியா?

அரசியலில் மட்டுமன்றி, நாட்டு நிர்வாகத்துக்கான சட்ட திட்டங்களில் மட்டுமன்றி, மக்களின் இன்றைய நடைமுறை வாழ்விலும் எல்லாக் காரியங்களிலும் ஏன், எப்படி என்று உசாவி சுதந்தரமான முடிவுக்கு வர ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமையிருத்தல் வேண்டும்; அது அங்கீகரிக்கப்பெற வேண்டும். நம்பிக்கையொன்றினையே அடிப்படையாகக்கொண்டு, வேத சாஸ்திரங்கள் வரையறுத்தன வென்று சாதி, பெரிய மனிதரும் பழக்கமும் சம்பிரதாயங்களும் பகர்வனவென்று மரியாதை செலுத்தி அப்படியே ஏற்றுக்கொள்ளும் கட்டுப்பாடு மறைய வேண்டும். கருத்தை வெளியிடவும், கூடிக் கலந்து பேசவும் சுதந்தரம் இருக்கவேண்டும்.

புதிய இந்தியக் குடியரசு, அதனது அரசியல் வரையறுத்துக் கூறியிருக்கும் குறுகிய பொருளில் மட்டுமன்றி, உலகம் கருதும் முறைப்படிக்கே உண்மையான மதச்சார்பற்ற சர்க்காராய்த் திகழ்தல் வேண்டும்; அதாவது மதம் வேறு சர்க்கார் வேறாக விலகியே இருத்தல் வேண்டும். தனிப்பட்டயாரும் எந்தப் பழக்கத்தையும் மேற்கொள்ளவோ, அதன் வழி நடக்கவோ, பிரசாரம் செய்யவோ, உரிமை அங்கீகரிக்கப்படுதல் போலவே, மதமெதிர்ப்புக் கொள்கைகளை மேற்கொண்டு, அவற்றின் வழி நடந்து அவற்றைப் பரப்பவும், உரிமையும், சுதந்திரமும் அங்கீகரிக்கப்பெற வேண்டும், மதம் மதமெதிர்ப்பு பற்றிய மேற்படி பிரசாரங்கள் மக்களிடை கோடியாக நடைபெறல் வேண்டும்; சமூகத்தொண்டு என்ற போர்வையில்—கல்வி நிலையங்கள், மருத்துவ விடுதிகள், தர்மசத்திரங்கள் பஞ்ச நிவாரணம் பெயரால்—அவை நடைபெற அனுமதிக்கவே கூடாது. கல்வி நிலையங்களில் அளிக்கப்பெறும் கல்வியோடு, மதக்கல்வி போதனையை எவ்வகையிலும் சேர்க்கக்கூடாது.

வளரும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தாமல் விட்டு வைத்திருப்பது, நாட்டின் வருங்கால முன்னேற்றத்துக்கே ஆபத்து விளைவிப்பதாகும். எனவே, கர்ப்பத்தடை சம்பந்தமாகவும், குடும்பத்தைக் கட்டுப்படுத்திச் சுருக்கிக்கொள்வது சம்பந்தமாகவும் சர்க்கார் மருத்துவ விடுதிகள் அனைத்திலும் டிஸ்பென்ஸரிகளிலும் இலவச மருத்துவ உதவி—ஆய்வுரை இன்ன பிற அளிக்க ஏற்பாடு செய்தல் வேண்டும். கல்வி நிலையங்களில் வயதுவந்தோரனைவருக்கும் உடலுறுப்புக் கல்வி நல்க வழி வகை செய்யவேண்டும். ஒன்றுக்குமுதவா—உடல், உள்ளத் திடமற்ற—பிள்ளைப்பேறுகள் ஏற்படாத வகைக்கான முறைகளையும் சர்க்கார் மேற்கொள்ளவேண்டும்.

ஜாதிமுறை யென்பது இந்தியாவின் சாபக்கேடாக, பல நூற்றுண்டுகாலமாக இருந்துவருகிறது இந்தியா தொகாறும் அனுபவித்து வந்திருக்கும்—இப்போதும் அனுபவித்து வரும் தொல்லை, தொந்தரை, இடுக்கண், இன்னல் இவையனைத்துக்கும் இதுவே காரணமாயிருந்து வருகிறது. கூடுமானவரையிலான எல்லா வழிகளிலும் கலப்பு மணத்துக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து, ஜாதிமுறையை ஒழிக்க, மக்களும் சர்க்காரும் முன்வரல்வேண்டும். கலப்பு மணம் செய்துகொள்வோர்க்கும், அவர்கள் தம் சந்ததிக்கும் சர்க்கார் சர்விஸ்களில் சலுகை தந்து, மேற்படி மணமுறையை ஊக்குவிக்க வேண்டும் சர்க்கார்.

குடிமக்கள் உரிமை, மதச்சார்பற்ற சர்க்கார், மக்கள் தொகை கட்டுப்பாடு, ஜாதி முறை ஆகிய முக்கிய தலைப்பின் கீழான இந்நான்கு தீர்மானங்களும் 18-ந்தேதியன்று சென்னை மவுண்ட்ரோடு ராஜாஜி மண்டபத்தில் டாக்டர் ஆர். பி. பராஞ்பே தலைமையில் நடைபெற்ற அனைத்திந்திய பகுத்தறிவாளர் முதல் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டவையாகும்.

பல்லாண்டு காலமாக, சென்னை கவர்னரின் பான்குவட்டிங் ஹாலாக இருந்து, சென்ற ஓராண்டாக ராஜாஜி மண்டபமாக மாறிய மாமண்டபம், அன்று பகுத்தறிவாளர்களின் பாசறையோ என நினைக்கும் வண்ணம், பல்லாயிரக்கணக்கான பகுத்தறிவாதிகள் நிறையப்பெற்று காட்சியளித்தது மாநாடு முற்பகல் முடிவுற்று, மீண்டும் மாலை 6-30 மணிக்கு மண்டபத்தின வெளிப்புறத்தில் துவக்கப்பட்டது.

மண்டப வெளிச் சதுக்கம் மின்சார விளக்குகளாலும், அதன் இயற்கைப் பூங்காவின் அமைப்புகளினாலும் ரம்மியமாக விளங்கியது. ஒலிபெருக்கி அமைப்புகள், வரிசைக்கிரமமாக மக்கள் ஆண் பெண்கள், அடர்ந்து அமர்ந்திருந்த

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

ரஷ்யாவுக்கு 'ஸ்பிரிங்போர்டு' ஆகுமாம் தென் சீனு!

—(0)—

மா சே துங் மாஸ்கோ வருகை பற்றி கருத்துரைகள்

லண்டன், டிச. 19—

கம்யூனிஸ்டுகள் கைப்பற்றி வரும் தென் சீனாவை 'ஸ்பிரிங் போர்டு' ஆகக் கொண்டு ஆசியாவின் இதர பகுதிகள் மீது பாய, ஒரு திட்டம் மாசேதுங் மாஸ்கோ வருகையின் பலனாக உருவாகும் என்று நம்பப் படுகிறது.

ஸ்டாலின் பிறந்த தினத்தை யொட்டி சீன கம்யூனிஸ்டு தலைவர்கள், மாஸ்கோ வந்திருப்பதாகக் கூறப்பட்டாலும் சீனுவுக்கும் ரஷ்யாவுக்குமிடையே மூன்று புது ஒப்பந்தங்களை செய்துகொள்ளவே அவர்கள் வந்திருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. நட்பு உடன்படிக்கை, வர்த்தக ஒப்பந்தம், ராணுவ ஒத்துழைப்புக்கான ஏற்பாடு இவைகளே இம்மூன்று ஒப்பந்தங்களாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக காமின்பாரம் தென் கிழக்குப் பிரதேசத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்திருக்கிறதென கூறப்படுகிறது. (1) சீனு, மங்கோலியா, வடகொரியா இவைகள் அடங்கியது. (2) தென் கொரியா, இந்தோசீனு, இந்தோனேஷ்யா, ஸியாம், பிலிப்பைன்ஸ் மலேயா இவைகள் கொண்டது. (3) இந்தியா, பர்மா, இலங்கை, பாகிஸ்தான், ஜப்பான் இவைகள் அடங்கியது.

இவைகளில் பிரசார மூலமும் சிறுகச் சிறுக கம்யூனிஸ்டுகளை உள்ளே புகச் செய்வது மூலமும் பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்வதென்றும் திட்டம் போட்டிருக்கிறதாம்.

கீழ்க்கோடி பிரதேசங்கள் விஷயமாக பொறுப்புள்ள மாலடோவ் அடிக்கடி ஸ்டாலினை நேரில் சந்தித்து மந்திராலோசனை நடத்தி வருகிறாராம்.

போர்ப் பணியாற்றி உருப்பிழந்தோர்க்கு

பிரிட்டனில் புதுத் திட்டம்

லண்டன், டிச. 19—

போரில் சேவை செய்த அதனால் அங்க நலன்களை இழந்தவர்களின் உபயோகத்திற்கு, கார் சக்கர நாற்காலி திட்டத்தை, பிரிட்டிஷ் அமுல் நடத்தி வருகிறது. 8 மாதங்களில் சுமார் 700 கார்கள் இம்மாதிரி அளிக்கப்பட்டிருக்கின்றன. காரை வைத்துக் கொள்வதற்கு ஆகும் செலவுக்காக ஒரு சிறு தொகையும் அளிக்கப்படுகிறதாம்.

கடைசி ஆள் உள்ளவரை சியாங் படையினர் போரிடுவராம்!

—;0:—

இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ள சீனத் தளபதி கூறுகிறார்!

ராவல்பிண்டி, டிச 19—

சீனுவிலிருந்து தப்பி இந்தியாவுக்கு வந்து சேர்ந்துள்ள சீன தேசிய ஜெனரல் குழுவினர், ராவல்பிண்டி வழியாக இன்று பிரயாணமாயினர். இவர்களில் ஒருவரான ஜெனரல் சூ ஒசிங் குளோப் நிருபரிடம கூறியதாவது:—தேசியப் படைகள் கடைசி ஆள் இருக்கும்வரை, எதிர்த்தே போரிடுவர். உலகத்திற்கே பேராபத்தான கம்யூனிஸ்டுகளை ஒழிப்பதே அவர்கள் நோக்கம். ரஷியா ஆயுதங்களையும், வெடி மருந்துகளையும் சீன கம்யூனிஸ்டுகளுக்கு விடாமல் சப்ளை செய்து கொண்டிருந்ததால்தான் அவர்கள் இவ்வளவுதூரம் வெற்றிபெற முடிந்தது.

முதலில் சியாங்கேஷேக்கை நாங்கள் சந்திக்க விரும்புகிறோம். அதன் பின்தான் எங்கள் எதிர்கால திட்டம் நிர்ணயிக்கப்படும்.

பர்மா ரோடைப் பாதுகாக்க முஸ்தீபு

கம்யூனிஸ்டுகள் எல்லையை நெருங்கிவிட்டதே காரணம்

ரங்கூன், டிச. 17—

கம்யூனிஸ்டுகள் பர்மா எல்லைக்கருகில் வந்துவிட்டதால், பர்மா ரோடைப் பாதுகாக்க சர்க்கார் சகல ஏற்பாடுகளையும் செய்யவேண்டும் என்று சோஷலிஸ்டுகட்சியும், மஞ்சள் பட்டை அணியும் பி வி.ஓ கட்சியும் ஒரு கூட்டு கோரிக்கையை தாகின் நு சர்க்காருக்கு அனுப்பியிருக்கின்றனர்.

இந்தப் பாதையை எந்த ஆக்ரமிப்பு காரியத்திற்கும் உபயோகிக்கப்படுவதை பர்மா அனுமதிக்கக் கூடாதென்றும், பர்மிய ஐக்யத்தைப் பலப்படுத்தவேண்டும் என்றும் அவ்வறிக்கையில் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

கரும்புகளை விரைவில் வெட்ட புது இயந்திரம்

லண்டன், டிச. 19—

கரும்புகளை சீக்கிரமாக வெட்ட ஒரு இயந்திரத்தை நவின்ஸ்லாந்து விவசாயி கண்டுபிடித்திருக்கிறார்.

இந்த இயந்திரம் மணிக்கு 40 டன் கரும்புகளை வெட்டுவதுடன், தழைகளையும் வெட்டி கட்டுகட்டாக கட்டி வைத்து விடுகிறதாம். ஆட்களை வைத்து முடிப்பதற்கு ஆகும் செலவில், மூன்றில் ஒரு பங்கு இந்த இயந்திரத்தினுல் மிச்சப்படுகிறதாம்.

சுரங்கம் அமைத்து வெளியேறிய கைதிகள்

பாரிஸ், டிச. 18—

பிரெஸ்னஸ் சிறையிலிருந்து தப்பிய மூன்று கைதிகளை பிரெஞ்சு போலீசார் தேடிக்கொண்டிருக்கின்றனர். இம்மூவரில் ஒருவர் 7 வருஷ தண்டனை பெற்றவர். மற்றிருவர் விசாரணைக் கைதிகள். இவர்கள் குழிபறித்து, சுரங்கம் அமைத்து தப்பிவிட்டதாகத் தெரிகிறது. அவர்கள் வெளியேறிய 36 மணி நேரம் கழித்தே அவர்கள் தப்பிவிட்டனர் என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

ரங்கூன், டிச. 19—

கிழக்கு ரங்கூனில் விசாரணையின் போது ஏற்பட்ட வெடி விபத்தில் ஒரு இந்திய மாண்டார், 12 பேர் காயமடைந்தனர். ஒரு கொள்ளை கூட்டத்தினர் தப்பிச்செல்லும்போது, தங்களை யாரும் பின் தொடர்ந்து வாராமல் செய்யவே கைகுண்டை வீசிவிட்டு சென்றதாகத் தெரிகிறது.

— குளோப்

மாலை மணி

சென்னை 20—12—49 செவ்வாய்க்கிழமை

பகுத்தறிவாளர் :: கோரிக்கைகள்

அனைத்திந்திய பகுத்தறிவாளர்மாநாடு சிறுஞ்சிறப்புடனும் பண்பும் பயனுடனும் சென்னையில் நிகழ்ந்தேறி முடிவுற்றிருக்கிறது; கடந்த கால் நூற்றாண்டு காலமாக இத்தென் தமிழ் நாட்டில் நாம் இடைவிடாதாற்றிவரும் பகுத்தறிவுப் பிரசாரத்துக்குப் பல்வேறு மாகாணங்களிலும் பெருமித ஆதரவும் ஒத்துழைப்பும் இருக்கிறதென்பதைக் கண் கூடாகக் கண்டோம். அன்று மாநாட்டு மண்டபத்தில் இவ்வுபகண்டத்தின் பற்பல பகுதிகளினின்றும் தேர்ந்தெடுக்கப்பெற்றப் பிரதிநிதிகள் பன்னூற்றுவர் பெருமையுடன் வந்து கலந்து கொண்டிருந்தனர் மாநாட்டில். இந்திய உபகண்டத்தின் தென் கோடியில் திட்டம்போட்ட முறையில் இயக்கமொன்று பகுத்தறிவுப்பிரசாரம் செய்து வருகிறதென்பதை இதர இடத்தவரும், இதர இடங்களில் எண்ணிலடங்கா "குத்துணர் பேரறிவாளர்கள் இருக்கத்தான் செய்கிறார்களென்பதை. நாமும் பெருத்த அளவில் தெரிந்து பெருமித மடைவதற்கு மேற்படி மாநாடு பெருந்துணையாயிருந்தது கண்டு பெருமகிழ்வுறுகிறோம், ஏகபோக சுயநலக் கும்பலின் இருட்டடிப்புக் கைங்கர்யம் இனியும் வெற்றி பயக்காதென்றறியும் போது இறும்பூதெய்துகிறோம்.

அனைத்திந்திய பகுத்தறிவாளர் மாநாட்டை, அதன நிகழ்ச்சிகளை இவ்வண்ணம் பலபட வாய் வேறுப்பாராட்டுவதால், நாம் திராவிட இயக்க இன்றியமையாக் கோட்பாடுகளை விலக்கி வைத்து விட்டதாகவோ, அல்லது அனைத்திந்திய பகுத்தறிவாளர் நம் மாதரவை விழைந்து நிற்பதால் அவர்கள் திராவிட இயக்கத்துக்கு உதவியும் ஒத்துழைப்பும் வழங்குகிறார்களென்பதாகவோ அர்த்தமல்ல வாழ்க்கைத்துறை ஒவ்வொன்றிலும் பகுத்தறிவைத துணை கொள்ள வேண்டுமென்பதே நமது அன்று முதல் இன்று வரையிலான பிரசாரமும் குறிக்கோளுமாயிருந்து வருகிறதென்பதையும், அனைத்திந்திய பகுத்தறிவாளர் மாநாட்டின் அடிப்படைக் கொள்கையும் அதுவேதானென்பதையும் தெளிவாகத் தெரிந்தோர்க்கு மேற் கண்ட பிரச்னை யெழ தினைத்துணையும் நியாயமேயில்லை, நிற்க.

பகுத்தறிவாளர் மாநாட்டில் ஒருமனதாய் நிறைவேற்றப் பெற்றிருக்கும் நான்கு நல்ல தீர்மானங்கள் பொதுவாக பொதுமக்களுடையவும், சிறப்பாக நாடாள வந்தாருடையவும் கவனத்தையும் கருத்தையும் கவரவேண்டியவையாகும். அரசியல், சட்ட திட்டங்கள் இன்னபிறவற்றிலன்றி மக்களின் அன்றாட வாழ்விலும் அறிவுடம்பட்ட சுதந்தர முடிவுகளுக்கு உரிமையும் அங்கீகாரமும் இருத்தல் வேண்டும்; இன்றைய சர்க்கார் உள்ளபடியே மதத்தை விடுத்த மதச் சார்பற்ற சர்க்காராகி மதப் பிரசாரத்துக்களிக்கும் உரிமையையொத்து மத மெதிர்ப்புப் பிரசாரத்துக்கும் உரிமை நல்கி கல்வி நிலையங்களில் மதக் கல்வி போதனைக்கு இடம் மறுத்து உத்தரவு பிறப்பிக்கவேண்டும்; சாபக்கேடாய் விளங்கும் ஜாதிமுறையொழிய, கலப்பு மணங்களுக்கு எல்லா வகை சலுகையும் தர முன்வர வேண்டும் சர்க்கார்; கர்ப்பத்தடைக்கும் குடும்பப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தவும் இலவச மருந்துதவுக்கு வழி செய்யவேண்டும். இந்நான்கு தீர்மானங்களும் நவிலவொண்ணா பேராதரவுடன் நிறைவேறின, 'ராஜ ஜி' மண்டபத்தில் நடைபெற்றப் பகுத்தறிவாளர் மாநாட்டில். தெளிவானபாதையை வகுத்துக் கொள்ளவும், அறிவுடன்பட்ட செயல்களில் இறங்கவும் துணை செய்யுமென்ற பெரு நம்பிக்கையே நம மன மகிழ்ச்சிக்கு உறுதுணையாய் நிற்கிறது.

அன்றாட வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் என் எப்படி என்ற கேள்விகளையெழுப்பி, ஒவ்வொன்றைப் பற்றியும் உண்மை காண உசாவு மனப்பான்மை ஏற்படவேண்டும். இதற்கு உரிமை அங்கீகாரம் வேண்டுமென்பதை யாரே மறுக்கவல்லார்? அணுக்குண்டுக்கும் 'அண்ணனைக்' சூப்பர் அணுக்குண்டும் கண்டு பிடிக்கப்பெற்று விட்ட இந்நாளில், இது போன்ற உரிமையளிக்கத் தயங்கும் சர்க்கார் உலகத்தோடும்காலத்தோடும் ஒட்ட ஒழுகும் சர்க்காராகுமாவெனக்கேட்கிறோம். இளமாணவரைச் சிந்திக்க வைக்கத் துணைசெய்வதே கல்வியின் ஒரு பெருங்குறிக்கோளாகையால்; அறிவாராய்ச்சிக்கு விலங்கிடும் மத போதனைக்குக் கல்வி நிலையங்களில் இடமிருக்கக் கூடாதென்பது சாதாரண அறிவின்பாற்பட்ட கோரிக்கையேயாகும். இக் கோரிக்கையை நிறைவு செய்ய மனந்துணியாத சர்க்கார், மத மெதிர்ப்புப் பிரசாரத்துக்கு அனுமதி யளித்து-அதன் வழி அறிவுப் பெருக்கத்துக்கு ஆக்கந்தர முன் வராத சர்க்கார் மக்கள் நலத்திலும் நல்வாழ்விலும் அக்கரை கொண்ட சர்க்காராக இருக்க முடியுமா வென்பதே இற்றை அறிவுலகம் கேட்கும் கேள்வியாகும். ஜாதி முறையை ஒழிக்க கலப்பு மண முறைகளுக்கு ஆக்கமும ஊக்கமும் தரவேண்டும் சர்க்கார், என்ற மூன்றாவது தீர்மானம் மிக மிகச் சாதாரண தீர்மானமேயாகும் பகுத்தறிவாளர் மாநாட்டில் இது பற்றி சற்றுத் தீரமான தீர்மானத்தையே எதிர் பார்த்தோம். மாநாட்டு வரவேற்புத் தலைவர் தோழர் எஸ். ராமநாதன் தனது உரையில் குறிப்பிட்ட வண்ணம் ஜாதிக்குள் ஜாதி திருமணம் செய்து கொள்வதை சட்டவிரோதமாக்க வேண்டுமென்ற முறையில், அதாவது ஒரே ஜாதியைச் சேர்ந்த ஆண்-பெண் இருவர் திருமணம் செய்து கொண்டால் தண்டனைக்குள்ளாவார்களெனசட்டம் வகுக்க வேண்டுமென்ற வகையில் தீர்மானம் கொணர்ந்து நிறைவேற்றியிருக்கவேண்டும். வர்ணாஸ்ரம நச்சுக் கொள்கைக்கு ஆட்பட்டு, கேடுகெட்டு தடுமாறி நிற்கும் இந்நாட்டுக்குக் 'கதி மோட்சம்' எதுவும் கிட்ட வேண்டுமானால் இதுவே தக்க மார்க்கமென்பதை யாரே மறுக்க முடியுமெனக் கேட்கிறோம். எனவே, மாநாட்டாரின் இம்மூன்றாவது தீர்மானம் 'சப்' பென்ற தன்மையதே யென்பதை முற்போக்காளர் மூடிவைக்க முடியாது! கர்ப்பத்தடை பற்றி மாநாடு நிறைவேற்றியிருக்கும் தீர்மானம் முழுக்க-முழுக்க சர்க்காரின் கவனத்துக்கும் நடவடிக்கை நிறைவேற்றத்துக்கும் உரித்தாகுமென்பதை எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறோம். உணவு உள்ளிட்ட இன்றியமையா எல்லாப் பொருள்களிலும் நெருக்கடி விஷம் போல், நாளுக்கு நாள் ஏறிக்கொண்டிருக்கும் இக் காலத்தில் கர்ப்பத் தடையின் இன்றியமையாமையை விளக்க பெரியதொரு பிரசார ஸ்தாபனமெதுவும் தேவையில்லை, பேரறிஞர் பராஞ்சிபே தமது தலைமையுரையில் குறிப்பிட்டது போல் உணவு உற்பத்திப் பெருக்கமும், மக்கள்தொகைக் கட்டுப்பாடும் சேர்ந்தாற்போல் நடந்து வந்தால்தான் எதிர் காலம் ஏதோ ஒரு அளவுக்குப் பரிமளிப்பாக இருக்கக்கூடும். எனவே. கர்ப்பத்தடையின் அவசியத்தையும் அவசரத்தையும் சர்க்காரும் பொதுமக்களும் முற்றுமுணர்ந்து முறைப்படி நடந்து கொள்ளவேண்டியது அவர்களின் நீங்காக் கடமையாகும்.

இறுதியாக மாநாட்டாரின் பொறுப்புணர்ச்சியையும் நல்லெண்ணத்தையம் உளமார வரவேற்றுப் பாராட்டுவதோடு மாநாட்டில் ஒருமனதாய் நிறைவேறியிருக்கும் தீர்மானங்களனைத்தும் நாட்டில் நடை முறையில் வரவேண்டும், பகுத்தறிவு சிறக்க வேண்டும், மௌடிகம் — மூட நம்பிக்கை மண்ணோடு மண்ணாய் மறைய வேண்டுமெனப் பெரிதும் விழைகிறோம்.

அறிவுக் கதிர்!

❋

கலையுரைத்த கற்பனையே
நிலையெனக் கொண்டாடும்
கண்மூடிப் பழக்கமெலாம்
மண்மூடிப்போக

—இராமலிங்க அடிகள்

இப்படைத் தோற்கின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தோற்றமும் கம்பீரமான தலைவரின் பேச்சும் கண்கவர்வனவாக விளங்கின.

பகுத்தறிவு கூட்டுப் பண்ணையினின்றும், இது கறுப்பு சற்றே விலகியிருந்த தோழர்கள், எஸ் ராமநாதன், பூவாளூர் அ. பொன்னம்பலனார், ராமன், கி. ஆ. பெ. விஸ்வநாதன் சாமிசிதம்பரனார், விருதுநகர் வி வி ராமசாமி, திருவொற்றியூர் டி சண்முகம். ஆகியோரும் மற்றும் தோழர்கள் சி என். அண்ணாத்துரை. க அன்பழகன், தோழியர் சத்தியவாணிமுத்து, அலமேலு அப்பாத்துரை, கா. அப்பாத்துரை, சி வி. ராஜன், கே எம். கண்ணப்பிரான்,எம் ஆர்.பாண்டியன், டி. எம் பார்த்தசாரதி, கே. கோவிந்தசாமி, ஏ. எஸ். ராமன், டாக்டர் கணேசன் மற்றும் மலையாள தோழர் வர்க்கி, ஆந்திரத்தோழர்ராமச்சந்திரராவ், கன்னடத் தோழர் மாசிலாமணி, கே. ஜி. சிவசாமி, மு. இளையபெருமாள் ஆகியோரும் மேடையில் அமர்ந்திருந்தனர்.

மாநாட்டுத் தலைவர்
பேரறிஞர் பராஞ்சிபே

அறிஞர் ஆர் பி, பராஞ்சிபே அவர்கள மாலை 6-30 மணிக்கு வந்து தலைமை யேற்றார், தோழர்கள் எஸ். ராமநாதன், கே. ஜி. சிவசாமி, வர்க்கி, மாசிலாமணி,ராமச்சந்திரராவ் கா. அப்பாதுரை, க. அன்பழகன், தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோரால் மேல்கண்ட நான்கு தீர்மானங்களும் கொண்டுவரப்பட்டு, ஆதரித்து முடிவு செய்யப்பட்டது.

பிறகு தலைவர் தனது முடிவுரையில், பகுத்தறிவாளர் மாநாட்டிற்கு இவ்வளவு பல்லாயிரக்கணக்கில் மக்கள் கூடுவர் எனத்தான் எண்ணியதில்லை எனவும், தனது ஆயுட் காலத்தில்,தான் 1904-ல் இவ்வியக்கத்தில்பங்கு கொண்டது முதல் இதுவரை இவ்வளவு பெரிய கூட்டத்தில் தான் பேசியதில்லை யென்றும்,எங்கு நோக்கினும் இளைஞர்கள் கூட்டத்தில் தோற்றமளிக்கின்றனர் எனவும். இத்தகைய பல்லாயிர இளைஞர் பகுத்தறிவு தத்துவத்தை நாட்டில் பரப்புவதோடு, ஒவ்வொரு இளைஞனும் கலப்பு மணம் செய்து கொள்ள உறுதி கொண்டு பணிபுரிவரேல், நாட்டிலே பகுத்தறிவு மணம் கமழ்வதோடு, நாட்டிற்கான நல்லாட்சியும் நடைபெற ஏதுவாகும் எனவும், மக்கள் மௌடீக மனப்பான்மையை விட்டு தீர ஆலோசித்து சுயஅறிவு பெறமுடியாமலிருப்பதால் உழைத்தால் நமக்குக் கிடைத்திருக்கும் சுதந்திரத்தை நிலை நிறுத்திக் கொள்ள முடியாதெனவும் ஆகவே ஒவ்வொரு துறையிலேயும். பகுத்தறிவு விளக்கம் காணுவதுதான் மனிதப் பேற்றின் பயன் எனவும் பேசி முடித்தார்.

கடைசியாக தோழர் சி. என் அண்ணாத்துரை அவர்கள், மாநாட்டின் முடிவில் நன்றி கூறும் முகத்தான், இந்த இந்திய உபகண்டத்தில் கட்டுப்பாடாக சென்ற 25 ஆண்டுகளாக பகுத்தறிவு பிரச்சாரம் நடைபெற்று வருவது தமிழ்நாடு ஒன்றில் மட்டும்தான் என்றும், ஆயினும், இத்தகைய ஒப்பற்ற பிரச்சாரத்தின் சிறப்பை, அறிஞர் பராஞ்சிபே வதியும் பம்பாய் மாகாணமோ, வங்கமோ, மற்ற வடநாடோ, ஏன் உலகமோ, அறியா வண்ணம் இருட்டடிப்பு செய்துவருவது இங்குள்ள தேசியப் பத்திரிகைகள்தான் என்றும், ஆனாலும், பகுத்தறிவுப் பயிர் இங்கு நன்கு தழைத்து வளர்ந்துள்ளது என்றும் மூட நம்பிக்கை, ஜாதிக் கொடுமை என்ற எதிரிகளை வீழ்த்துவதில், தமிழ்நாடு கண்ட இப்பகுத்தறிவுப்படை தோற்குமேல், வேறு படைகளால் இக்கொடுமையான எதிரிகளை ஒழிக்க முடியாது எனவும், ஆகவே மூட நம்பிக்கை ஒழிப்புப் போராட்டத்தைத் துவக்க ஏற்ற இடம் இத்தமிழ் நாடுதானென்றும், இத்தமிழ் நாட்டிலேயே, அகில இந்திய பகுத்தறிவாளர் சங்க தலைமை பீடம் அறிஞர் ஆர். பி. பராஞ்சிபே அவர்களைத் தலைவராகக் கொண்டு திகழ்வது நலமாக இருக்குமென நம்புகிறேன். என்றும், ஆகவே இவ்வித கட்சி பேத மின்னியில் மக்கள் இதில் பங்கு கொண்டு பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தலைவர் அவர்களுக்கும், ஏனைய, ஆந்திர, கேரள, கன்னட மற்றும் வெளிமாகாண பிரதிநிதிகளுக்கும். பொதுமக்களுக்கும் குறிப்பாக தோழர் எஸ். ராமநாதன் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டபின், மாநாடு வெற்றியுடன் முடிவுற்றது.

அமெரிக்க எண்ணெய் வாங்குவதை பிரிட்டன் குறைக்கும்

டாலர் சிக்கன விஷயமாக நடவடிக்கை

வாஷிங்டன், டிச. 19—

அமெரிக்காவிலிருந்து டாலர் கொடுத்து எண்ணெய் இறக்குமதி செய்வதை பிரிட்டன் பாதியாகக் குறைத்துவிடும் என்று தெரிகிறது. இந்த முடிவை அமெரிக்க எண்ணெய் முதலாளிகளுக்குத் தனிப்பட்ட முறையில் அறிவித்துவிட்டதாகவும் தெரிகிறது.

இதுவரை அமெரிக்காவிலிருந்து 140 000 பீப்பாய்கள் தினமும் பிரிட்டனுக்கு வாங்கிக் கொண்டிருந்தனராம். இப்பொழுது அட்லீயின் பிரதேசத்திலிருந்தே 75,000 பீப்பாய்கள் கிடைக்கிறதாம்.

பழமையில் புதுமை காண முயல்வது பைத்தியக்காரத்தனமே!

மதச்சார்பற்ற ஆட்சியில் மதபோதனை ஏன்?

உணவு உற்பத்திக்கு அக்கரை காட்டுவோர் மக்கள் பெருக்கத்துக்கு மாற்றம் காணவேண்டாமா?

பகுத்தறிவாளர் மாநாட்டில் பேரறிஞர் பராஞ்சிபே

(நேற்றையத் தொடர்ச்சி)

இளம்பெண்களும் ஆடவரும் தற்காலிகப் பிரச்னைகளில் அதிகமாக ஈடுபடும் தன்மையுடையவர்களாக இருக்கின்றனர். அவர்கள் தற்கால அரசியலில் ஈடுபட்டு அவதியுறக்கூடாது. நமது அரசியல் தலைவர்கள் மாணவர்களை அதிகமாக அரசியல் போராட்டத்தில் இழுத்து விட்டுவிட்டனர். அவர்கள் தாம் செய்த தவறை இன்றுதான் உணர்கின்றனர். இருந்த போதிலும் இங்ஙனம் மாணவர் உலகு அரசியலில் ஈடுபட்டதனால் ஏற்பட்ட தீமைகளைத் துடைக்க இன்னும் நெடுநாட்களாகும். ஆகவே மாணவர்களை நல்வழியில் நடத்திச் செல்ல எல்லா முயற்சிகளும் செய்யப்பட வேண்டும்.

மக்களுடைய அறியாமையைப் பயன்படுத்திக்கொண்டு, யதேச்சாதிகாரம் செலுத்தும் முறை, உலக முழுவதிலும் காணப்படுகிறது. இது பகுத்தறிவுக் கொள்கையைப் பாழ்படுத்துவதாகும். ஹிட்லருடைய ஆட்சியில், நஜீசத்துக்கு மாறுபட்ட கருத்துடைய ஏடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. ரஷியாவிலும் இதேபோல் விஞ்ஞானிகளும், அறிஞர்களும் அசல் சோவியத் கொள்கைக்கு மாத்திரம் பயன்படுத்தப்பட்டு வந்தார்கள். அக்கொள்கைக்கு மாறுபட்டோர் புறக்கணிக்கப்பட்டனர். இங்ஙனமே, அமெரிக்காவிலும் அமெரிக்கக் கொள்கைக்கு மாறுபட்டோரெல்லாம் மட்டந்தட்டப்பட்டனர்.

இத்தகைய பேராபத்து இந்தியாவை அணுகாமலிருக்க நாம் விழிப்பாக இருக்கவேண்டும். மற்ற நாடுகளைவிட இந்நாடுதான் அத்தகைய ஆபத்துகளுக்கு எளிதில் இலக்காகும் தன்மை வாய்ந்ததாக இருக்கிறது. ஏனெனில், இங்கு நாம் கருத்துக்களுக்கு மதிப்பு தருவதைவிட தனிப்பட்ட மனிதருக்கு மதிப்பு தரும் பண்புடையவர்களாக இருக்கின்றோம். ஆதமீகத் துறையில் தனி மனிதருக்கு மரியாதை செய்யும் பெற்றி நம்மவரிடம் உள்ளதென்று குறிப்பிட்டேன். ஆனால், அரசியலில் மாத்திரம் அத்தகைய போக்கு இல்லையா என்று கேட்கிறேன்.

மகாத்மா காந்தியைப்பற்றி பேசிய நம் நாட்டுத் தலைவர்களெல்லாம், மகாத்மாவை அவரது பகுத்தறிவுக் கொள்கைக்காகப் போற்றியதைவிட, ஆதமிகத்துக்காகவே அதிகமாகப் போற்றிப் புகழ்ந்தார்கள். இதனைப் பலர் வெளிப்படையாகவும் சொல்லியிருக்கிறார்கள். அரசியலில் குற்றங் காண வேண்டுமென்பது என் நோக்கமல்ல. மக்களிடையே பகுத்தறிவு வளர வழி செய்ய வேண்டும் என்பதற்காகவே இதனைக் குறிப்பிடுகிறேன். பகுத்தறிவை இழந்து, தனி மனிதருக்கு மரியாதை செய்வதுதான் தேச பக்தி என்ற நிலை இருப்பது, அடுத்துவரும் அபாயத்தின் அறிகுறியாகும். பகுத்தறிவுவாதிகள் ஜாதி, மத, நிறவேற்றுமைப் போராட்டங்களில் ஈடுபடக் கூடாது. தேசபக்தி சில சமயங்களில் பகுத்தறிவுக்கு முட்டுக்கட்டையாக அமைந்துவிடுகிறது. அதுபோலவே, தேசபக்திக்கு எதிர்ப்பாக உள்ள உணர்ச்சியும் பகுத்தறிவைப் பாழ்படுத்தி தாழ்வு மனப்பான்மையை மக்களிடையே வளரச்செய்து விடுகிறது. பிரிட்டிஷ் ஆட்சியில் இத்தகைய மனப்பான்மை வளர்க்கப்பட்டுவிட்டது. எதிர்காலத்தில் அந்த மனப்பான்மை மாறும் என்று எதிர்பார்க்கிறேன்.

நம் நாட்டவரிடம், முன்னோர்கள் செயல் என்பதற்காக அவற்றைப் போற்றும் பண்பு அதிகமாகக் காணப்படுகிறது. விஞ்ஞானிகள் தங்களுடைய ஆராய்ச்சிசாலைகளில் அல்லும் பகலும் பாடுபட்டு கண்டுபிடித்துள்ள புதுமைகளெல்லாம் பழங்கால ஏடுகளில் பொதிந்துகிடப்பதாகக் கருதுகின்றனர் பலர்.

நான் ஆஸ்திரேலியாவுக்குச் செல்வதற்குச் சில ஆண்டுகட்கு முன், முன்னாள் ஜில்லா நீதிபதி ஒருவர் எழுதிய புத்தகமொன்றைப் படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதில் ஆஸ்திரேலியாவைப் பற்றிய விளக்கமும் அதனைச் சார்ந்துள்ள சில தீவுகளைப்பற்றிய விளக்கமும் ராமாயணத்தில் அடங்கியுள்ளது என்று எடுத்துக்காட்ட முயன்றிருந்தார் அதன் ஆசிரியர். இதைக்கண்ணுற்ற நான், "வானத்தயன், பாஸ்கூக் முதலிய ஆராய்ச்சியாளர்கள் இந்த ராமாயணத்தைப் படித்துப் பாராமல், பயங்கர கடல்களையெல்லாம் கடந்து கஷ்டப்பட்டு அத்தீவுகளைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டார்களே, இது என்ன மூடாள்தனம்!" என்று நினைத்தேன். இதுபோலவே, மகாபாரதத்தின் புகழ் பேசிய பிரபல தேசத் தலைவர்களும் உண்டு. இத்தகைய மூடத்தனங்கள் ஒழிக்கப்பட்டு சிந்தனா சக்தியும், பகுத்தறிவு வாதமும் ஓங்கும்படி செய்தல் வேண்டும்.

தத்துவ ஆராய்ச்சித் துறையில் பகுத்தறிவு வாதத்தைச் சிறந்தது என்று நான் ஒப்புக்கொள்ளுகிறேனோ, அதனை சிறப்பும், பொதுமனித வாழ்க்கையின் மற்றெல்லாத் துறைகளிலும் நடைமுறையில் தரத்தக்கதாய் அமைய வேண்டும் என்பதையும் ஒப்புக்கொள்ளுகிறேன். ஒழுக்கம், சமூக உறவுமுறை, பொருளாதாரம், அரசியல், கல்வி ஆகிய எல்லாவிதத் துறைகளிலும் பகுத்தறிவுக் கொள்கை இடம் பெறவேண்டும்.

கர்ப்பத்தடை

அரசியல், பொருளாதாரம் சம்பந்தமாக நாம் அதிகமாகப் பேச வேண்டியதில்லை. தற்போதுள்ள முக்கியமான பிரச்னை, உணவுப் பிரச்னை. இப்பிரச்னையைத் தீர்க்க, அரசினர் எல்லாமுயற்சிகளையும் செய்து வருகின்றனர்; ஆனால் என்னைப் பொறுத்தவரையில் உணவு பிரச்சினை என்பதை, ஜனத்தொகையைப் பற்றிய பிரச்னை என்றே கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். ஜனத்தொகையைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் தலைவர்கள் ஈடுபட்டால், உணவுப் பிரச்னையைத் தீர்ப்பது எளிதாகிவிடும். எனவே, கர்ப்பத்தடை மூலம் ஜனத்தொகையை மட்டுப்படுத்துதலே சரியான வழி என எனக்குத் தோன்றுகிறது. அதிகப்படியான பிறப்புகளால் அதிகப்படியான தொல்லைகளும், அதிகப்படியான மரண விகிதமும் தான் ஏற்படுகிறது. மக்கள் தொகை அதிகரிப்பதால் மாத்திரம் நாடு பலம் பொருந்தியதாகிவிடாது. நல்ல உடல் நலமும், கல்வியறிவும் பெற்ற மக்களைக் கொண்ட நாடே பலம் பொருந்திய நாடாகத் திகழ முடியும். இதைத்தான் "சில எண்ணிக்கைகளே இவ்வுலகை ஆள்கிறது" என்று கிரேக்க தத்துவஞானி ஒருவர் கூறி போந்தார். அமெரிக்கா 130 மில்லியன் ஜனத்தொகை கொண்ட நாடு. ரஷியா 180 மில்லியன் ஜனத்தொகை கொண்ட நாடு. இவ்விருநாடுகளும் செம்மையான வாழ்வு வாழ்கையில், 33 கோடி மக்களைக் கொண்ட நம் இந்திய நாட்டில் ஒவ்வொருவரும் உடல்நலம் பொருந்தியவர்களாக இருந்தால், நாடு எவ்வளவு நலம் பெறும் என்பதை எண்ணிப்பாருங்கள்.

எனவே, கர்ப்பத்தடை மிக மிக இன்றியமையாது வேண்டப்படுவதாகும். இதனை நல்ல முறையிலே செய்யவேண்டும். இதற்கு வேண்டிய வசதிகள் தற்காலத்தில் கிடைக்கின்றன. ஒரு பகுத்தறிவுவாதி என்ற முறையில் கூறுகிறேன், இக்கர்ப்பத்தடை விஷயத்தில் நாம் அலட்சியமாயிருத்தல் கூடாது. இனியும் காலதாமதம் செய்யாமல், அரசாங்கம் இவ்விஷயத்தைக் கவனித்து ஜனத்தொகை பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முன்வரவேண்டும். கர்ப்பத்தடையை நன்வலியுறுத்துவதற்கு மற்றொரு காரணமும் உண்டு. அதாவது, சில குடும்பங்களில் பரம்பரையாக சில நோய்கள் வளர்ந்து வருவதுண்டு. கட்டாய கருத்தடை செய்வதன் மூலம் இத்தகைய பரம்பரை நோய்கள் மேலும் பரவாதபடி தடை செய்யலாம். ஆனால், கருத்தடை செய்வதில் மதவாதிகள் குறுக்கிடுகிறார்கள். பகுத்தறிவின் அடிப்படையில் அமைக்கப்பெற்ற ஒரு நாட்டில் மதவாதிகளின் இத்தகைய எதிர்ப்புகளுக்கு இடந்தரக் கூடாது.

அகிம்சை

அடுத்தபடியாக உள்ளது அகிம்சைக் கொள்கை; அகிம்சை என்பது மக்களில் அனைவரும் சமம், எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே என்ற அளவில் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டியதே. ஆனால், தனிப்பட்ட வாழ்க்கையை அது பாதிக்கக் கூடாது. நாட்டின் அமைதியைப் பாதுகாக்கும் விஷயத்தில் அகிம்சையை வற்புறுத்திக் கொண்டிருப்பது சரியல்ல. இராணுவம், போலீஸ் முதலியன ஆட்சி முறைக்கு தேவையானவையே. அதுபோலவே கொசு, ஈ முதலியனவும், கொடிய விலங்கினங்களும் அழிந்துபட பலாத்காரம் தேவையே.

அகிம்சைக் கொள்கையைப் பகுத்தறிவுக் கண்கொண்டு பார்க்க வேண்டும். தற்போது நம் நாட்டில் பசுக் கொலை கூடாது என்று பேசப்படுகிறது. இது பற்றி வகுப்புக் கலவரங்களும் நிகழ்கின்றன. ஆகவே, இவ்விஷயத்தில் பகுத்தறிவுவாதிகள் தமது கருத்தை வெளியிட வேண்டியவர்களாக இருக்கின்றனர். பசு பயன்தரும் பிராணியாக இருப்பதனால், பசுவைப் போற்றுதல் நம்மவருக்கு அவசியமாகிவிட்டது. ஆனால் இப்படி அவசியம்பற்றி அகிம்சையை மேற்கொள்வது என்பது எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தும் உயரிய கொள்கையாகிவிடாது. ஜனத்தொகை பெருக்கம் விஷயத்தில் கட்டுப்பாடு அவசியம் என்பதை முன்னரே நான் குறிப்பிட்டேன். அதுபோலவே பசுக்களைப் பராமரிக்க வேண்டுமானால் மட்டுப் பண்ணை வைத்து நடத்தும் முறையும் கவனிக்கப்பட வேண்டும். இதுதான் உண்மையான அகிம்சையாகுமே யன்றி அவசியமில்லாத மிருகங்களைக் கொன்று விடுவதும் அவசியமான பிராணிகளைக் காப்பாற்றுவது அகிம்சையாகாது

என்று பேசினார். அவர் மேலும் பேசுகையில் மதச்சார்பற்ற சர்க்கார் பற்றி குறிப்பிடுகையில் பள்ளிச்சிறுவர்களுக்கு மதபோதனை கூடாதென்றும், ஆட்சியாளர் மதபோதனையில் நம்பிக்கை வைத்திருப்பதைக் கண்டித்தும் பேசினார்.

ஸ்டாலினுக்கு வாரிசு யார்?

லண்டன், டிச. 19—

மார்ஷல் ஸ்டாலினைப்பற்றி விதவிதமான செய்திகள் வெளிவர ஆரம்பித்திருக்கின்றன.

அவர் நோய் வாய்ப்பட்டிருக்கிறார் என்று சில செய்திகள் கூறுகின்றன. அவர் [illegible] அவர் நடமாடவே [illegible] இருக்கிறார் என்றும், அவருக்கு [illegible] என்றும் சில [illegible] செய்தியை மறுக்கின்றன. சமீபத்தில் எடுக்கப்பட்ட அவரை [illegible] படங்களை வெளியிடக்கூடாது என்று தடுக்கப்பட்டிருப்பதாகவும் [illegible].

[illegible] பிறந்த தின [illegible] ஐக்போலிஷ் [illegible] அவருக்குப் பரிசாக அளிக்கப்பட்டிருக்கிறதாம்.

அவருக்கு தன் வாரிசை யார் என்று நிர்ணயிக்கும் செய்வதில் பல தொல்லைகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. அவருக்குப் பின் பதவிக்கு வரக்கூடியவர்கள் மாலடோவ், மாலென்கோவ் என்று இருவரை சொல்லப்பட்டு வந்தது. ரஷ்யாவில் உள்ளேயும், வெளியேயும் கலகம் ஏற்படாமல் அடக்கி, தயார் [illegible] சோவியத் போலீஸ் அதிகாரிப் பெரும் இந்த வாரிசு விஷயமாக இப்போது பிரஸ்தாபிக்கப்படுகிறது. (ரூலோம்)

மஞ்சூரியாவை ஆதிக்க படுத்துகிறதாம் ரஷ்யா

டோகியோ, டிச. 19—

சென்ற நான்கு ஆண்டுகளில் மஞ்சூரியாவில் ஜப்பானியர்களை விரட்டிவிட்டு 8 லட்சம் ரஷ்யர்கள் குடியேறி இருக்கின்றனர் என்று, அமெரிக்க செய்திகள் கூறுகின்றன. ஹார்பினிலிருந்து டைரன் வரையிலுள்ள மஞ்சூரிய ரயில்வே ரஷ்யர்கள் வசமாகிவிட்டதாம். மஞ்சூரியாவிலும் சைபீரியாவிலும் புதிதாக மூன்று ரயில்வேக்களை ஏற்படுத்த ரஷ்யா திட்டம் போட்டிருக்கிறதாம்.

1946-ல் ரஷ்ய துருப்புகள் மஞ்சூரியாவை விட்டு வெளியேறியபோதிலும், சியாங்குடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தப்படி சில ரயில்வே துருப்புகள் மட்டும் மஞ்சூரியாவிலேயே இருந்துவந்தன. —ரூலோம்

புது உலகத் தொழிற் சங்கத்தின் பொறுப்பு

லண்டன், டிச. 18—

புது உலகத் தொழிற் சங்க ஸ்தாபனத்தின் பொறுப்பு மிகவும் அதிகம் என்றும், கம்யூனிஸ்ட் ஸ்தாபனத்தின் இத்திட்டங்களை முறியடிப்பதுடன், ஆக்க வேலையில் ஈடுபட வேண்டும் என்றும், நிர்மாண திட்டம் போட்டு வேலை செய்ய வேண்டும் என்றும், இப்புது ஸ்தாபனத்தில் அமெரிக்க பிரிட்டிஷ் ஆதிக்கம் இருப்பதாகக் கூறப்பட்டது உண்மையல்ல வென்று நிரூபிக்கப்பட்டுவிட்டது என்றும் 'டைம்ஸ்' பத்திரிகை எழுதுகிறது. (ரூலோம்)

பாழும் பதவிக்காகப் பகுத்தறிவுப் பணியைத் தடை செய்வதா?

மத்திய சர்க்கார் மடியைநோக்கி மாகாண சர்க்கார் ஏமாந்து நிற்பதா

பாவூர் சத்கரத்தில் சிவசாமி-தங்கப்பழம்-திராவிடமணி-ரத்தினம்

பாவூர் சத்திரம், டிச 18—15-12-49 வியாழனன்று தி. மு. கழக துவக்க விழா, எஸ். சே. தங்கரத்தினம் அவர்கள் கட்டடத்தில், தோழர் வெள்ளச்சாமி அவர்கள் தலைமையில் ஆரம்பமாயிற்று. நாட்டுப் பண் பாடலுக்குப்பின் தலைவர் சிறிது நேரம் பேசினார். பிறகு, தோழர்கள் திராவிடமணி, தூத்துக்குடி தோழர்கள் எம். ரத்தினம், எம். எஸ். சிவசாமி, இரா. சு. தங்கப்பழம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

திராவிடமணி

திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் இந்த நாட்டு மக்களின் வாழ்வுக்கு வழி காட்டுகிறது. திராவிட நாடு தனிநாடாகும்வரை, ஓயாது ஒழியாது நாங்கள் பணியாற்றியே தீருவோம். எவ்வளவு இன்னல்கள் ஏற்பட்டாலும் ஏற்றுக்கொள்ள தயாராயிருக்கிறோம் என்று பேசி முடித்தார்.

எம். ரத்தினம்

திராவிட முன்னேற்றக் கழகம் ஏதோ புதுக்கட்சி யென்றும், என்ன சாதித்துவிட முடியுமென்றும் பேசிக்கொள்ளுகிறார்கள். காங்கிரசிலிருந்து "பெரியார்" தன் நாங்கள் பதியவர்களேயொழிய கொள்கையில் நாங்கள் பழையவர்கள் தான். ஆனால் முன்னைவிட இப்பொழுது சற்று அதிகமான கொள்கைகளையும், அமைப்புகளையும் அமைத்துக் கொண்டு வேகமாக வேலை செய்து வருகிறது தி. மு. கழகம். எல்லாவிதமான அடக்கு முறைகளையும் அள்ளிவீசி நமமை நசுக்கப் பார்க்கிறார்கள், காங்கிரஸ் சர்க்கார் அந்த சர்க்காருக்குப் பக்கபலமாக காமராஜர்களும், சி. பி. சுப்பையாக்களும் குருவளி வேகத்தில் சுற்றுப் பயணம் செய்கிறார்கள். 1951-ஆண்டு தேர்தலில் மீண்டும் பதவி வேட்டையாடுவதற்குத்தான். இப்படி அலைகிறார்களேயொழிய, மக்களுக்கு நன்மை செய்வதற்கல்ல. தொழிலாளியின் உரிமையைப் பறிப்பதில் பண மூட்டைகளுக்குப் பக்க பலமாக இருக்கிறது, காங்கிரஸ் சர்க்கார். இந்தத் தேசிய வீரர்களின் ஆட்சியில் எந்தத் தொழிலாளியினுடைய வேலை நிறுத்தத்தையாவது வெற்றி பெறச் செய்தார்களா? இன்னும் தொழிலாளி பிரச்சினையில் காங்கிரஸ் சர்க்காரின் கண் மூடித்தனத்தைக் கண்டித்தும் பேசி முடித்தார்.

எம். எஸ். சிவசுவாமி,

அன்று சியாங்கே ஷேக்குக்கு அமெரிக்காவில் என்ன வரவேற்பு இருந்ததோ, அது தான் இன்று நமது நேருவுக்குக் கிடைத்திருக்கிறது. பர்மா சிகுமுன்னால் சீனாவுக்கு இருந்த நிலைமையில் இருந்ததோ, அதே நிலைமையில் தான் இன்று இந்தியா இருக்கிறது. ஆகவே, சியாங்கின் நிலைமை நேருவுக்குக் கிடைத்தால் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. எனவே, சீன நாட்டு சீர்குலைவுக்கு காரணமானவைகளை அறிந்து நாமும் திருத்திக் கொள்ளவேண்டும்.

வெள்ளைக்காரன் நம்மிடம் விட்டுபோன 1700 கோடி ரூபாய் நிதியையும் கரைத்து, ஏழை விவசாய மக்களிடம் கடன்கேட்கும் நிலைக்குக் காங்கிரஸ் சர்க்கார் வந்திருக்கிறதென்றால், மஞ்சள் பெட்டியின் மகத்துவம் எப்படியிருக்கிறதென்று யோசித்துப் பாருங்கள். சர்வதேச பாங்கியில் விவசாயத்துக்காக வாங்கிய 70 கோடி ரூபாயில் நமது மாகாணத்துக்கான பங்கை, மத்திய சர்க்கார் கொடுக்க மறுக்கிறதென்றால், நம்முடைய மாகாணம் எந்த நிலைமையில் இருக்கிறதென்று பொதுமக்கள் சிந்திக்கவேண்டுகிறோமென்றும், தி. மு. கழகத்தார் வகுப்புத் துவேஷிகள் அல்லவென்றும், கடவுள், பக்தர்களுக்கு விரோதிகள் அல்லவென்றும் மக்கள் மடமையினின்றும் நீங்கவேண்டுமென்பது தான் எங்கள் நோக்கமென்றும் பேசிமுடித்தார்.

இரா. சு. தங்கப்பழம்

வெள்ளைக்காரன் நம்மை விட்டுப் போகும்பொழுது ஆட்சி பீடத்தையும் அதிகாரத்தையும் தந்துவிட்டுத்தான் போனான். அவன் போகும் பொழுது நம நாட்டிலிருந்து எதையும் எடுத்துக்கொண்டு போய்விடவில்லை, மலைகளெல்லாம் அப்படியே இருக்கிறது, நதிகளெல்லாம் ஓடிக்கொண்டுதான் இருக்கின்றன. கட்டிடங்கள் எதுவும் இடிந்து விடவில்லை. ஆனால், காங்கிரஸ்காரர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் வெள்ளைக்காரன் செய்யாதவைகளை யெல்லாம் செய்து விட்டார்கள். வெள்ளைக்காரன் ஆட்சியில் கேட்கப்படாத ஜாமீன் தொகை கேட்கப்பட்டது. வெளியே இருந்த கம்யூனிஸ்டுகளை உள்ளே பிடித்து வைத்தார்கள். புத்தகங்கள், நாடகங்களுக்கு தடை விதித்தார்கள். போடாத வரிகளெல்லாம் போட்டு விட்டார்கள். மத்திய சர்க்காரின் மடியையும், வாயையும் நம்பி மாகாண சர்க்கார் இருப்பதால்தான் நமக்கு இந்த நிலைமை. எனவே, நாம் தனிநாடு கோருகிறோம். பர்மா, இலங்கை போல நாமும் தனியாட்சி செலுத்தினால்தான், இலங்கையில் வாடும் 10 லட்சம் தமிழர்களையும், பர்மாவில் கஷ்டப்படும் நமது மக்களையும் காப்பாற்ற முடியும் என்றும் சோஷியலிஸ்டு கட்சியினருக்கும் தி. மு. கழகத்தாருக்கும் உள்ள கொள்கை வேற்றுமைகள் பற்றி பேசி முடித்தார். கூட்டம் இரவு 11 மணிக்கு முடிந்தது.

சுரண்டை, பட்டமுடையார்புரம், ஆவுடையனூர் ஆகிய இடங்களிலிருந்தெல்லாம் மக்கள் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

ஓடும் ரயிலில் யானையின் அட்டகாசம்

வட இங்கிலாந்தில் ரயில் வண்டியில் ஏற்பட்ட ஒரு யானை மதம் கொண்டு அட்டகாசம் செய்ததின் விளைவாக ரயில் எல்லாம் நிறுத்தப்பட்டதுடன், ஒரு புகலும் தாமதிக்கப்பட்டன.

இந்த யானை ஒரு சர்க்கஸ் கம்பெனியைச் சேர்ந்ததாம். எடின்பரோவிலிருந்து கிளாஸ்கோவுக்கு ரயில் வண்டி செல்லவே, இந்த யானை தன் கால்களால் வண்டியிலுள்ள சாமான்களையெல்லாம் அடித்துக்கொண்டு ஆர்ப்பாட்டம் செய்ய ஆரம்பித்தது.

யானை இருந்த வாகன் பிரமிமாக அசைய, வண்டியை டிரைவர் பாஸ்டன் ஸ்டேஷனுக்கு வண்டியை நிறுத்தினார். இதற்குள் ஒரு சர்க்கஸ் சிப்பந்தி அந்த யானையை அமைதிப்படுத்தி விட்டது.

இதன் காரணமாக பின்னால் வந்த மின்சார வண்டிகளும், தபால் வண்டிகளும் நிறுத்தப்பட்டன. ரயில்வே இலாகாவின் இறக்கைகள் மூலம் கூடிய சீக்கிரம் போக்குவரத்து சரி செய்யப்பட்டன. யானையை கட்டுக்குள் அடக்க முடியாது என்ற நிலைமை ஏற்படவே, அதற்கு புகையிலை சாப்பிட கொடுக்கப்பட்டது. ஒரே குண்டில் யானை மாண்டது.

இந்த களேபரத்தில் மற்றொரு யானையும் காயமடைந்து பிரயாணத்தின் நடுவே ஒரு சர்க்கஸ் மனிதரின் கடிதம் ஒன்றையும் சாப்பிட்டுவிட்டது.

இந்த யானையின் அட்டகாசம் பிரிட்டிஷ் பத்திரிகைகளும் முதல் பக்கத்தில் பிரசுரித்திருக்கின்றன. —ரூட்டர்

ஹங்கேரிபின்னிஷ் கம்யூனிஸ்ட் தலைவர் ராஜிநாமா?

லண்டன், டிச. 18—கம்யூனிஸ்டு கட்சியிலிருந்து ஹங்கேரி பின்னிஷ் தலைவர்கள் விலகி வருவதாக இங்கு செய்தி கிடைத்திருக்கிறது.

ஹங்கேரி கம்யூனிஸ்டுத் தலைவர் ராஜ்க் விசாரணையில் ஈடுபட்டு பத்திரிகையில் செய்தி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. ராஜ்க் வழக்கு விசாரணையின்போது சில தவறுகள் ஏற்பட்டது உண்மையே என்று இவர் ஒரு பொதுக் கூட்டத்திலேயே ஒப்புக்கொண்டாராம். சில நாட்களாகவே இவர் வெளியிலே காணப்படவேயில்லை.

பின்னிஷ் பார்லிமெண்டின் கம்யூனிஸ்டு மெம்பர் காஸ்லி கொளவன் என்பவர் ராஜிநாமா செய்துவிட்டார். சமீபத்தில் கம்யூனிஸ்டுகளைக் கண்டித்து புகைந்து போனது முதல் கொண்டே இவர் கட்சியிடத்தில் மிகவும் அதிருப்தி அடைந்திருக்கிறார் என்று தெரியவருகிறது.

இந்தியாவுடன் வர்த்தகத்தைப்பெருக்குங்கள்!

—(0)—

கலிபோர்னியருக்கு ஆய்வுரை

நியூயார்க், டிச. 18—"இந்தியாவுடன் வர்த்தகத்தைப் பெருக்குங்கள் அதனால் உங்களுக்கு அதிக நன்மையே கிடைக்கும் என்று கலிபோர்னியர்களுக்கு யுனைடெட் ஸ்டேட்ஸ்' வைத் தொழில் டைரக்டர் யோசனை கூறியிருக்கிறார்.

கலிபோர்னியாவின் கவர்னர் ஏர்ல்வாரன் காட்டிய கைத்தொழில் முதலாளிகள் தொழிலாளர் ஆட்சிக்கு மேற்படி டைரக்டர் அனுப்பியுள்ள செய்தியில் கூறியிருப்பதாவது:—

கீழ்க்கோடியில் இந்தியா ஒன்றே வர்த்தகத்தை விருத்தி செய்து கொள்ள ஏற்ற நாடாக இருக்கிறது. அமெரிக்காவுடன் வர்த்தகத்தை விருத்தி செய்துகொள்ளும் ஆவலை இந்தியத் தலைவர்கள் வெளிப்படுத்தியிருக்கின்றனர். இந்தியாவுடன் வர்த்தகத்தைப் பெருக்கிக் கொள்வதால் கலிபோர்னிய கப்பல் வர்த்தகம் சிறந்து விளங்கும்.

ரஷ்யக் கடற்கரை பகுதிகளிலிருந்து மக்கள் வெளியேற்றம்

லண்டன், டிச. 18—ரஷ்யாவின் கடற்கரைப் பகுதிகளிலிருந்து ஏராளமான மக்கள் வெளியேற்றப்படுகின்றனர் என்று, கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து தகவல்கள் கிடைத்திருக்கிறதென்று லண்டன் 'ஸ்டார்' பத்திரிகை ஒரு செய்தியை பிரசுரித்திருக்கிறது.

வெளியேற்றப்படுகிறவர்களுக்கு தனியாக உடமைகளை எடுத்துச் செல்ல அனுமதி கொடுக்கப்படவில்லை. அவர்கள் ஒன்று கூட்டுப் பண்ணைகளுடனாவது அல்லது கூட்டுறவு சங்கங்களுடனாவது சேர்ந்துகொள்ள வேண்டுமாம். இல்லையேல், அவர்கள் நாட்டைவிட்டு வெளியேற வேண்டுமாம்.

தென்கிழக்கு ஆசியாபற்றி அமெரிக்காவின் கொள்கை

உருவாகி விட்டதாம்!

வாஷிங்டன், டிச 18—தென்கிழக்கு ஆசியாவில் யுனைடெட் ஸ்டேட்ஸ் கடைப்பிடிக்கும் கொள்கை உருவாகி விட்டது என்றும், இது சம்பந்தமான ஏற்பாடுகளை அமெரிக்க துதர் ஜெஸ்ஸப் இன்னும் மூன்று மாதகாலத்தில் பூர்த்தி செய்வார் என்றும் தெரிகிறது.

கிழக்கோடியிலுள்ள அமெரிக்க ராஜீய பிரதிநிதிகள் காரியாலயங்களுக்கெல்லாம் விஜயம் செய்தபின், காங்கிரசுக்கு திரும்பியதும் ஜெஸ்ஸப் ராஜிநாமா செய்துவிடுவார் என்றும் கூறப்படுகிறது.

இவர் டோக்கியோவில், மக்ஆர்தருடன் சந்தித்துப் பல முக்கிய விஷயங்களைக் குறித்து பேசுவார். பாங்காக்கில் நடைபெறவிருக்கும் யு. எஸ். ராஜீயப் பிரதிநிதிகள் மாநாட்டில் இவர் கலந்து கொள்வார். இம்மாநாடு ஜனவரியில் நடைபெறுவதாக இருக்கிறது. பிப்ரவரிக்கு ஒத்திப் போடப்படுகிறதென்றும் கம்யூனிஸ்டு சீன அரசாங்க விஷயத்தில் முடிவை உத்தேசித்தே இம்மாதிரி செய்யப்பட்டிருக்கிறதென்றும் நியூயார்க் ஹெரால்டு ட்ரிப்யூன் வாஷிங்டன் நிருபர் கூறுகிறார்.

பிராங்கோவின் மகள் திருமணம்

முதலில் எதிர்த்த தந்தை பணிந்தார்

லண்டன், டிச 19—ஸ்பெயின் சர்வாதிகாரி ஜெனரல் பிராங்கோ, தனது ஏக புதல்வி கார்மென், ஊழியர்களுடன் போகும் கடற்கரைக்கு அனுப்பப்படக்கூடாது என்று கட்டளையிட்டிருந்தபோதிலும், அந்த உத்தரவை மீறி, அங்கு வந்து செல்லுபவரையும் இகழ்ந்து வைத்த பிராங்கோவின் மகள் கார்மென் வில்லாவர்டே டாக்டர் மார்க்வேஸ் என்பவரை அடுத்த பிப்ரவரியில் திருமணம் செய்துகொள்ளப் போகிறார். முதலில் அவள் தகப்பனார் இந்த திருமணத்தை கடுமையாக எதிர்த்தார். முடிவில் அவரே பணியவேண்டியதாயிற்று.

பூனைகள் மருத்துவத்துக்கு விசேஷ ஆஸ்பத்திரி!

ஆம்புலன்ஸ் படைகள்கூட உண்டாம்!

லண்டன், டிச. 18—பிரிட்டனில் நாய்களிடம்காட்டப்படும் சலுகைகள் பூனைகளுக்கும் காட்டப்படவேண்டுமென்று ஒரு இயக்கம் ஒரு ஸ்தாபனம் ஆரம்பித்திருக்கிறது. இந்த திட்டம் முதன் முதலில் நீயூகாஸில் பரீட்சார்த்தமாக அமுல் படுத்தப்பட உள்ளதாம். முதலாக பூனைகள் எவ்வளவு இருக்கின்றன எனப் பதிவு செய்யப்படுமாம். நோயுள்ள விபத்தில் உள்ளான பூனைகளுக்கு சிகிச்சை செய்ய ஒரு விசேஷ ஆஸ்பத்திரி ஏற்படுத்தப்படுமாம். நோய்வாய்ப்பட்ட பூனைகளை ஆஸ்பத்திரியில் கொண்டு சேர்க்க ஆம்புலன்ஸ் படை இரவும் பகலும் தயாராக இருக்குமாம்.

இந்த திட்டம் வெற்றிகரமாக நடந்தால் ஒவ்வொரு நகரத்திலும் இத்திட்டம் அமுல் படுத்தப்படுமாம். இந்த சங்கத்தின் மெம்பர்கள் பாட்ஜ் அணியவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதாம். —ஏ.பி.

சாமான் மூட்டைகள் பற்றி ரயில்வே சிரத்தை

சென்னை, டிச. 19—ரயில் வாகன்களில் ஏற்றப்படும் சாமான் மூட்டைகள் படிப்படியாக, சேதமில்லாமல் உள்ளடங்கிய பொருள் சேதம் ஆகாமல் இருப்பதற்காக ஒரு வாகனில் 10 டன் எடைக்கு மேல் மூட்டைகள் அனுப்பாக வைத்து ஏற்றலாம் என்று எம். எஸ். எம். ரயில்வே அதிகாரிகள் உத்தரவு பிறப்பித்திருப்பதாகத் தெரிகிறது. இந்த உத்தரவு இம்மாதம் முதல்கொண்டே அமுலிலிருந்து வருகிறது.

இந்த ஏற்பாடு தென் இந்திய ரயில்வேயிலும் கிரேட் பெனின்சுலார் ரயில்வேயிலும் ஏற்கனவே அமுலில் இருப்பதாகத் தெரிகிறது.

ஜாதிக்குள் ஜாதி திருமணம் செய்து கொள்வதை சட்டவிரோதமாக்குக!

பட்டப்பெயரை நீக்கி, நெற்றிக் குறியை விலக்குவதுமட்டும் போதாது

ஏன், எப்படி என்று உசாவ யார்க்கும் உரிமை வேண்டும்

பகுத்தறிவாளர் மாநாட்டில் தோழர் ராமநாதன் வரவேற்புரை

சுதந்தர சிந்தனையாளர் உலக யூனியனின் ஒரு பகுதியாக பகுத்தறிவாளர் இயக்கமொன்றை தேசீய அடிப்படையில் நிறுவும் பணியே நமது முதலாவதும், முக்கியமானதுமாகுமென்று தோழர் எஸ். ராமநாதன் அவர்கள் கடந்த 18-ந் தேதியன்று சென்னை மவுண்ட்ரோடு ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற அனைத்திந்திய பகுத்தறிவாளர் மாநாட்டுக்கான தனது வரவேற்புரையில் குறிப்பிட்டார். இம்மாநாடு உடனடியாக அனைத்திந்திய கமிட்டி யொன்றை நிறுவ வேண்டுமென்றும், அக்கமிட்டி பல்வேறு மாகாணங்களிலும் பகுத்தறிவு நிலையங்களைத் துவக்கிப் பணியாற்ற முற்படுமென்றும் தோழர் ராமநாதன் மேலுங் குறிப்பிட்டார்.

லண்டன் ரேஷனலிஸ்ட் பிரஸ் அசோஸியேஷனின் நற்றுணையுடன் பயோத்ததொரு தொண்டு மேற்கொள்ள, இந்தியாவின் பல்வேறு மொழிகளிலும் பத்திரிகைகளும், இசரவெளியீடுகளுங்கொண்ட அச்சகமொன்றை நிறுவுவதும் நம் நோக்கமாகும்.

தோழர் ராமநாதன் தொடர்ந்து குறிப்பிட்டதாவது:—

வேதசாஸ்திரம் சொல்லாற்றென்றும், பெரிய மனிதர் கூறினாரென்றும், சம்பிரதாயம் வரையறுத்ததென்றும் கண்மூடித்தனமாக எதையும் நம்புவதை விடுத்து, ஏன், எப்படி என்று ஒவ்வொரு விஷயத்தையும் ஆராய்ச்சிக் கண்கொண்டு பார்க்க அடிப்படையிருக்கவேண்டும்; அவ்வுரிமை அங்கீகரிக்கப்படல் வேண்டும். சர்க்கார் மதச்சார்பற்று திகழ்தல் வேண்டும்.

'மதச் சார்பற்ற' என்றால் என்ன பொருள்? மத அமைப்பும் பிடிப்பும் விலகவேண்டும். மத விரோதமும் நாஸ்திகமும் தான் பகுத்தறிவு வாதம் என்று கொள்ள வேண்டுவதில்லை. ஒவ்வொருவரும் தம் தம் மதத்தை மேற்கொள்ள உரிமையிருக்க வேண்டும். தனிப்பட்ட ஒவ்வொருவரும் யாதொரு மதத்தை மேற்கொண்டு, பிரசாரம் செய்து வருவதற்கும், அதை எதிர்த்துப் பிரசாரம் செய்யவும் உரிமையும் சுதந்தரமும் இருக்க வேண்டும்.

"சமூகத் தொண்டு என்ற போர்வையில் மதப் பிரசாரம் நடப்பதை அனுமதிக்கவே கூடாது. கல்வி, மருத்துவம், தர்மம் போன்றவற்றை மதஸ்தாபனங்கள் பொறுப்பில் ஒருக்காலும் விடுதல் கூடாது. வானொலி நிலையத்தையும் சினிமா நிலையங்களையும் மதப் பிரசாரத்திற்குப் பயன்படுத்திக் கொள்வது தவறாகும்."

இந்தியாவில் ஜாதி முறைகள் பற்றி தோழர் ராமநாதன் குறிப்பிட்டதாவது:—

ஜாதியொழிப்புப் பிரச்னை தீர இப்போது மேற்கொள்ளப்படும் முறைகள் திருப்திகரமானவை யென்று சொல்ல முடியாது. ஜாதிப் பட்டப் பெயர்களையும், ஜாதி நெற்றிக் குறிகளையும் ஜாதியைக் குறிக்கும் ஆடையணிகளையும் ஒழிக்கத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன; சர்க்கார் சர்வீஸ்களில் வகுப்புவாரி முறையைக் களையவும் யோசனைக் கூறப்படுகிறது. ஜாதிப் பிரச்னையைத் தீர்க்கவல்லன அல்ல இவை. ஒரு ஜாதிக்குள்ளேயே செய்து கொள்ளும் திருமணங்களை சட்ட விரோதமாக்கக் கூடிய விதி முறை யொன்றை சர்க்கார் பிரகடனம் செய்ய வேண்டும். ஒரு ஜாதியினையே சேர்ந்த இருவர் தங்களுக்குள் திருமணம் செய்துகொண்டால், அவர்களைத் தண்டனைக்குள்ளாக்க வேண்டும். இம்முறை அமுலுக்கு வருமேயானால், நமக்கு இரண்டாவது தலைமுறையில் ஜாதிகள் கட்டாயம் ஒழிந்தே தீருமென்பது உறுதி. இதுவன்றி, கலப்பு மணத்தை ஆதரிக்கும் திட்டங்களும், அதற்குப் பொருளுதவித் தரும் முறைகளும் எத்துணையும் பயன்படப் போவதில்லை.

ஏஜெண்டுகள் தேவை

கீழ்க்கண் ஊர்களுக்கு 'மாலை மணி' விற்பனை செய்ய முன் பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை :—

காட்டுமன்னார்கோவில்	
பொன்னமராவதி	
திருகழுக்குன்றம்	
பசுபதிகோயில்	காரைக்கால்
மானாமதுரை	தச்சநல்லூர்
வடிப்பட்டி	சங்கரிட்ரக்
பனங்குடி	வேலூர்
உதகை	ஈங்கூர்
தேனி	முசிரி

நிர்வாகி : "மாலை மணி" சென்னை.

தமிழாசிரியர் மாநாடு

லால்குடி, டிச. 16 —

திருச்சி நாட்டாண்மைக் கழகத் தமிழாசிரியர் மாநாடு 11—12—49ல் லால்குடி உயர்நிலைப்பள்ளியில், திருச்சி நாட்டாண்மைக் கழகத்தலைவர் தோழர் பி. பி. கே. இராஜசிதம்பரனார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாநாட்டில் வித்துவான் ஹாஜி அப்துல்காதர் ஜமாலி எம். எல். ஏ. அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

அரியலூர் உயர் நிலைப்பள்ளித் தமிழாசிரியர் புலவர் க. முனுசாமி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்திய பின்பு; தலைவர் பேசுகையில் தமிழாசிரியர்கள் நாட்டு மக்களிடையே கலையுணர்ச்சி உண்டாகவும், தமிழ்க்கலை வளரவும், பிறமொழி மீது வெறுப்பை காட்டாது நம் தமிழ் மொழி வளர்ச்சிக்கான தொண்டுகள் செய்யவும் வேண்டும் என்று கேட்டுக்கொண்டு தமிழாசிரியர்களிடையே காணப்படும் பலவகைப்பட்ட ஊதியத் திட்டம் நீக்கப்படுவது அவசியம் என்றும், தமிழாசிரியர்கள் நிலையாலும் ஊதியத்தாலும் உயர்த்தப்பட வேண்டியது நேர்மையென்றும் கூறி, நாட்டாண்மைக் கழகத்தாரால் தமிழாசிரியர்கட்கு என்னென்ன செய்யப்பட வேண்டுமோ அவற்றைத் தயங்காது அவ்வப்போது செய்து தருவதாக வாக்குறுதியும் கூறினார்கள்.

பின்னர் ஜனாப் ஹாஜி ஜமாலி M. L. A. அவர்கள் பேசும்போது முன்னாள் கல்வி அமைச்சர் தோழர் அவிநாசிலிங்கம் செய்த தமிழ்த் தொண்டைப் பாராட்டியதோடு, 'கலைக்களஞ்சியம்' ஆக்குவதற்கு நியமிக்கப்பட்ட குழுவில் தமிழ்ப் புலமையுள்ளவர்கள் அதிகம் நியமிக்கப்பட வேண்டும் என்று கூறியதோடு, தமிழாசிரியர்கள் குறைபாடுகளை நீக்குவது குறித்து அமைச்சரைப் பேட்டி கண்டு பேசியதாகவும் மீண்டும் அமைச்சரைப் பேட்டி கண்டு ஆவன செய்வதாகவும் கூறினார். அண்மையில் கல்வியமைச்சர் மாதவமேனன் அவர்கள் தன்னைப் பேட்டி காணவந்த தமிழாசிரியர்களைக் கடிந்து பார்த்து அவமதித்ததாகக் கூறப்படும் செய்தி உண்மையானால் அது மிகவும் வருந்தத்தக்கது என்றும் கூறினார். வரும் சட்டசபைக் கூட்டத்தில் தமிழாசிரியர்களது நிலை, ஊதியம், ஏனைய பிற விவரம் குறித்துதான் விளக்கம் கோரப் போவதாகவும் அறிவித்தார். இறுதியாக, இம்மாநாட்டில் காணப்படும் தமிழாசிரியர்களது ஒற்றுமையைத் தான் பாராட்டுவதாகவும், இவ்வொற்றுமை என்றென்றும் வளர்ந்தோங்க இக்கழகமும், மாகாணத்திலுள்ள ஏனைய தமிழாசிரிய கழகங்களும் தமிழாசிரியர்களும் பாடுபட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

பின்னர், கழகச் செயலாளர் புலவர். ப. அரங்கசாமி மாநாட்டு அறிக்கையைப் படித்துவிட்டுத் தீர்மானங்களைப் பிரேரேபித்து அதன் மீது பேசினார்.

இறுதியாக கூட்டுச் செயலாளர் புலவர். சி. இராமசாமியால், வாழ்த்துச் செய்தி படிக்கப்பட்டு நன்றி கூற மாநாடு நன்முறையில் நடந்தேறியது.

நடைமுறை ஆண்டிற்குக் ஓர் செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

23—12—49

நாகர்கோவில் :— டி. கே. சீனிவாசன்.

24—12—49

பெரம்பூர் :— இரா. நெடுஞ்செழியன்.
கொமரலிங்கம் :— சி. பி. சிற்றரசு.
அழகனுபுரம் (நாஞ்சில்) :— டி. கே. சீனிவாசன்.

NATIONAL CALL
(நேஷனல் கால்)
திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரித்து வெளிவரும் ஆங்கில வார இதழ்
தனிப் பிரதி 0—2—0
ஆண்டு சந்தா 6—0—0
முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.
விவரங்கட்கு:— பொறுப்பாளர்
நேஷனல் கால்,
சென்னை 17.

மூல வியாதிக்கு
கருணைக்கிழங்கு லேகியம்
மூல மூளைகள், ரத்தம், சீழ் வடிதல், மூலப் பவுத்திரம், கட்டி, சீக் கசிவு, ரணம் சுகமாகும்; வாய்வு, அஜீரணம், மலபந்தம் நீங்கும். 3 நாளில் குணம்தெரியும்.
12 நாள் மருந்து ரு 3—0—0
12 நாக பஸ்பம் ரு. 2—0—0
P.S.R பங்கஜம் வைத்யசாலை
பழனி (S. I.)

தூத்துக்குடியில் நாடகங்கள்

24—12—49
தோழியர் மூவாலூர் ராமாமிர்தத்தம்மையார் அவர்கள் தலைமையில்
'சந்திரமோகன்'

25—12—49
தோழர் வி. வி. ராமசாமி அவர்கள் தலைமையில்
"நீதிதேவன் — — மயக்கம்"
ஆகிய இரு நாடகங்கள் நடைபெறும்
நடிப்பு: புலவர் K. R ராமசாமி, திரு C. N. அண்ணாதுரை மற்றும் பலர் நடிக்கிறார்கள்

விவரங்கட்கு :—
இராமலிங்கம்,
செயலாளர்,
ந. தி. மு. கழகம், தூத்துக்குடி

ஆசிரியருக்கு முடங்கல்

வடநாட்டார் அகதிகளா?

ஐயா,

எங்கள் ஊருக்கு இரண்டு தினங்களுக்கு முன் மூன்று பெண்கள் (வடநாட்டார்) ஒரு சிறு குழந்தையுடன், தாங்கள் ராஜபுதனத்தைச் சார்ந்தவர்கள் என்றும், "நாங்கள் பாகிஸ்தான் கலவரத்தில் பல கோடி பொருள்களை இழந்து, கணவன், சுற்றத்தாரையும் பிரிந்து அகதிகளாக வந்துள்ளோம்—எங்களைக் காப்பது உங்கள் கடமை" என பிச்சைக் கேட்டார்கள். எச்சிற் கையில் காக்கை ஓட்டாத—பிரபுக்கள் சிலர் அவர்களுக்குக் கொஞ்சம் பொருள் கொடுத்து அனுப்பினார்கள் ஆனால் எவரும் அவர்களுக்கு உதவுவது அவசியம் என்று எண்ணவேயில்லை.

காரணம்; அவர்கள் ஆங்கிலம், இந்துஸ்தான், தெலுங்கு முதலிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்த மேதைகளாக இருக்கின்றனர். உன்னத உடையலங்காரம், நல்ல மிடுக்கான நடை, பேச்சு!

நாங்கள் கேட்கிறோம் தமிழ் நாட்டில் கூலிவேலைசெய்பவனும் கூழ் குடித்து பிழைப்பவனும் சகிக்க முடியாத அன்ன கூறிக்கொண்டு கௌரவப் பிச்சையெடுக்கும் சந்ததிகள் சாப்பிடுவது உயர்ந்த பிஸ்கெட்டும், ரொட்டித் துண்டுகளும்!—சத்தமானவெண்ணெய் கலந்தது 'இம்மாதிரி இவர்கள் வடநாட்டைவிட்டு தமிழ் நாட்டுக்குச் சுற்றுப் பிரயாணம் செய்து, பணம் சம்பாதிப்பது ஏன்?

சென்னை மாகாணம்—தன் வறுமை நிலைமையை மறந்து, வடநாட்டு அகதிகளுக்கு அரசாங்க செலவிலே நல்ல உடை, உணவு, பங்களா கொடுத்து சோம்பேறிகளாக 'ஆவடி'யிலே வைத்திருக்கிறார்களே—அதனைக் கேட்டுத் தான் இவர்கள்—தமிழ்நாட்டில் ஏமாந்த சோணகிரிகள் அதிகம் என எண்ணிக்கொண்டு, தர்மம் என்ற பெயரைக் கூறிக்கொண்டு கிளம்பியிருக்கிறார்கள் போலும் அதிகாரிகள் இதன் உண்மையின் அர்த்தம் என்ன என்பதை விளக்காமல் செய்கிறார்கள் இந்த வடநாட்டார்.

தமிழர்கள் இவர்கள் வார்த்தையைக் கேட்டு ஏமாந்து போகாதிருக்க முயற்சிப்பார்களாக.

ஒட்டப்பட்டி 18—12—49 — கடத்தூர் ஈர. அருணாசலம்

திருமணம்

திருச்சி, டிச. 5 —

30 11-49 புதன் கிழமை மாலை 2 மணிக்கு திருச்சி ஜில்லா ரிஜிஸ்டிரார் அவர்கள் முன்னிலையில், லால்குடி தாலுக்கா விராலூர் தோழர் வெங்கடாசலம் அவர்கள் புதல்வர் தோழர் வி. அழகிரிமணியும், திருச்சி சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் புதல்வி தோழியர் எஸ். சந்திரலதாவிற்கும் சீர்திருத்தக் கலப்பு (பதிவு) திருமணம் சிறப்பாக நடைபெற்றது. பின்னர் திருச்சி பீமாகர் தோழர் சாமி அவர்கள் தலைமையில் நிகழ்ந்த வாழ்த்துக் கூட்டத்தில் பல உள்ளூர், வெளியூர் நண்பர்களால் ஏராளமான வாழ்த்திதழ்களும், புத்தகங்களும், வெள்ளிச் சொப்புகளும் மணமக்களுக்கு அன்பளிக்கப்பட்டன. (இதன் செலவாக ரூபாய் இரண்டு வரப்பெற்றோம், நன்றி! ஆ-ர்)

தி. மு. கழகக் கிளைகள்

—————:0:—————

புதியம்புத்தூர்-சிற்றூர்க்கிளை

புதியம்புத்தூர், டிச. 12—

இவ்வூர் திராவிடர் கழகக் கூட்டம், 11-12-49-ல் தோழர் எஸ். என். செல்லையா தலைமையில் நடைபெற்றது. அதுபோது; இவ்வூர் திராவிடர் கழகம், "திராவிட முன்னேற்றக் கழகம்-புதியம்புத்தூர் சிற்றூர்க்கிளை" என மாற்றியமைக்கப்பட்டது. பின் கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:- செ. துரைசாமி, துணைச்செயலாளர்:-பா. அய்யாசாமி; பொருள் உறுப்பினர்:-மு. துரைபாண்டியன்; விளம்பர உறுப்பினர்:-மு. அய்யாதுரை. ஏனைய செயற்குழுவினர்:-இ. துரைசாமி, ச. மாரியப்பன், ஆ. சங்கரன், இ. வ. முத்தையா, ரா. சண்முகம், த. நாராயணப்பெருமாள். (செ-ர்)

* * *

நாகூர்-சிற்றூர்க்கிளை

நாகூர், டிச. 13—

இவ்வூர் தி. மு. க. அமைப்புக் கூட்டம் தோழர் எஸ். வி. சபாபதி அவர்கள் இல்லத்தில் தோழர் ப. தி. இராசன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது "திராவிட முன்னேற்றக் கழகம்—நாகூர் சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—ப. தி. இராசன், துணைச்செயலாளர்:-எஸ். வி. சபாபதி, நிதி உறுப்பினர்:-இ. எம். ஹனிபா; விளம்பர உறுப்பினர்:—இரெ. பத்மநாபன். ஏனையசெயற்குழுவினர்கள்:-சி. சண்முகம், சே. சாத்தலிங்கம், ஆர். கோவிந்தசாமி, ம. துரைராஜ், எம்.பி.தாஸ். பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, கூட்டம் முடிவுற்றது. (செ-ர்)

* * *

சட்டையம்புதூர்—சிற்றூர்க்கிளை

சட்டையம்புதூர், டிச. 18—

திருச்செங்கோட்டைக் குறிவுள்ள சட்டையம்புதூரில் 30—11—49ல் தி. மு. க. அமைப்புக்கூட்டம் நடைபெற்றது. ஏற்கனவே செய்யப்பட்ட முடிவுபடி "திராவிட முன்னேற்றக் கழகம்-சட்டையம்புதூர் சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டது. பின் கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:— அ. செட்டி; துணைச் செயலாளர்:— அ. நாட்டராயன்; பொருள் உறுப்பினர்,— அர்த்தநாரி; விளம்பரஉறுப்பினர்:- த. சுந்தரம். பின் தோழர் சுந்தரம் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது. (வு-உ)

* * *

ஆலாங்குப்பம்—சிற்றூர்க்கிளை

ஆலாங்குப்பம், டிச. 16—

ஆம்பூர் வட்டம், ஆலாங்குப்பத்தில், 10—12—49 அன்று தி. மு. க. அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது தோழர் ஐ. பெ. கோவிந்தன் இளைக் கழகத்தின் வேலைத் திட்டங்களை விளக்கிப் பேசினர். பின் "திராவிட முன்னேற்றக் கழகம்—ஆலாங்குப்பம் சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது:

செயலாளர்:—எம். பாலன், துணைச்செயலாளர்:- என். முருகேசன், நிதி உறுப்பினர் -பெரியசாமி; விளம்பர உறுப்பினர் ஏ. டி. மத்தேயு, ஞா. சால்மன் ஏனைய செயற்குழுவினர்:- பி. முத்துசாமி, சின்னதம்பி, கிருஷ்ணன், வெங்கடேசன், சின்னசாமி, அயிமன்னன், தனபால் பின் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது.

* * *

வீரசோழம்—சிற்றூர்க்கிளை

வீரசோழம், டிச. 16—

11—12—49-ல் தோழர் மீ. க. சையது-முகம்மது தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் "திராவிட முன்னேற்றக் கழகம்—வீரசோழ சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:— பி. கே. எஸ். சட்டைமுகம்மதின், துணைச் செயலாளர்-டி. சிவசாமி, பொருள் உறுப்பினர்-த. கா. கெ. அப்துல்ஹமீது, விளம்பர உறுப்பினர்—செ. மு. வகாப். ஏனைய செயற்குழுப்பினர்கள்-மு. உ. மு. உதுமானியார் மீ. அ. செய்யது முகம்மது, க. இ. செ. முகம்மது, த. கு. முகா. முகம்மது முஸ்தபா, முகம்மது அபூபக்கர், செ. அ.மு. முகம்மது யூசுப், ரா. சா. மு. முகம்மது வலியர், க. மு. நல்லகனி. பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு கூட்டம் முடிவுற்றது. (செ-ர்)

* * *

விக்கிரம சிங்கபுரம்-சிற்றூர்க்கிளை

விக்கிரம சிங்கபுரம், டிச. 16—

11—12—49 ல் தோழர் சு. கந்தசாமி தலைமையில் இவ்வூர் திராவிடர் கழகக் கூட்டம் நடைபெற்றது. அது போது தோழர் இரா. க. மணி தி. மு. கழகம்அமைகவேண்டிய அவசியம் குறித்துப் பேசினர். பின்புபெரும்பாலோரின் ஓட்டுகளைப் பெற்று, திராவிடர் கழகம், "திராவிட முன்னேற்றக் கழகம்—விக்கிரம சிங்கபுரம் சிற்றூர்க்கிளை" என மாற்றியமைக்கப்பெற்றது. பின் கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர்:-சு. கந்தசாமி துணைச் செயலாளர் — இரா. க. மணியம், நிதி உறுப்பினர்-பி. தம்பிதுரை, விளம்பர உறுப்பினர்-வி. பி. அரசு. ஏனைய செயலுறுப்பினர்கள்-கே. எஸ். சின்னராசு, பி. சுப்பையா, மணி, வி. எஸ். சண்முகம், பிலிப், எஸ். சுப்பையா, எஸ். ஏ. முகம்மது, சு. பொன்னம்பலனர். பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு கூட்டம் முடிவுற்றது.

* * *

வேலப்பாடி—சிற்றூர்க் கிளை

வேலப்பாடி, டிச. 16—

இவ்வூர் தி. மு. க. அமைப்புக் கூட்டம் 11—12—49 அன்று தோழர் ரா. பாலசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. அதுபோது "திராவிட முன்னேற்றக் கழகம்—வேலப்பாடி சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—வெ. அ. இளஞ்செழியன்; துணைச் செயலாளர்:- வெ. சு. இராமலிங்கம்; பொருள் உறுப்பினர்:- ரா. பாலசுந்தரம்; ஏனைய செயற்குழுவினர்:— ராமநாதன் (புத்தகப் பொறுப்பாளர்) ப. ராமச்சந்திரன், மு. பொ. சம்பந்தம், வெ. கெ. ஏகாம்பரம், வெ. த. தீனதயாளன். வெ. ரா. தங்கவேலன், ஈ. சு. மணி, செ. வி. சிவப்பிரகாசம், ஏ. தி. தயானந்தன், வெ. அ. கண்ணன், ஞா. அந்தோனி. பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு கூட்டம் முடிவுற்றது.

ஐ. நா. அழைப்பை இஸ்ரேல் நிராகரித்தது

லேக்ஸக்ஸஸ், டிச. 19—

ஜெருசலத்தை சர்வதேசக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கு உள்ள ஆட்சேபனைகளை, ஐ. நா. தர்மகர்த்த கவுன்சில் முன்பு தெரிவிக்க ஒரு பிரதிநிதியை அனுப்புமாறு ஐ. நா. அழைத்ததை இஸ்ரேல் நிராகரித்துவிட்டது.

வேதனையைப் போக்குக; இன்றேல் வெளியேறுக!

—————:(0):—————

வேலை யில்லாத் திண்டாட்டமும் வீடில்லாத்தொல்லையும் ஒழியட்டும்

—————(0)—————

பம்பாய் மக்கள் மன்றத் தீர்ப்பு

வேலையில்லாத் திண்டாட்டத்தையும், வீடில்லாத் தொல்லையையும் தீர்க்க ஆட்சியாளர் தவறிவிட்டனர். இவற்றைத் தீர்க்க இந்த சர்க்காருக்கு சக்தியில்லையென்றால் ஆட்சியாளர் தமது பதவியை ராஜினாமா செய்யட்டும்.

இந்தப் பிரச்னைகளைத் தீர்க்க திட்டம் தீட்ட அரசியலாருக்கு ஒரு மாத காலம் அவகாசம் தருகிறேன். அதற்குள் அரசாங்கம் தன் கடமையைச் செய்யத் தவறினால், பம்பாய் பொது மக்கள் தக்க நடவடிக்கைஎடுத்துக்கொள்ளுவார்கள். அதாவது, தொழிற்சாலைகளும் கடைகளும், அலுவலகங்களும் மூடப்பட்டு, பொது வேலை நிறுத்தம் செய்யப்படும். இப்படிப்பட்ட நிலைமை ஏற்படக் கூடாது என்று நான்விரும்புகிறேன் என்று தோழர் அசோக்மேத்தா அண்மையில் பம்பாயில் நடைபெற்ற தொழிலாளர் கூட்டம் ஒன்றில் பேசியபோது குறிப்பிட்டார்.

"உண்ண உணவும், குந்த குடிசையும் பெறுவது எங்கள் பிறப்புரிமை."

"விலையேற்றத்தைக் குறையுங்கள்!"

என்ற இலட்சிய ஒலிகளை எழுப்பிய வண்ணம், பம்பாயில் பெரிய தொரு ஊர்வலம் பம்பாய் கம்கார் மைதானத்திலிருந்து புறப்பட்டு கௌஹாத்தி வரை சென்றது. ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். 500க்குமேற்பட்டபெண்களும், குழந்தைகளும் இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டிருக்கிறார்கள்: மேற்படி ஊர்வலத்தை தோழர் அசோக்மேத்தா தலைமை தாங்கி நடத்திச் சென்றார்.

இதே சமயத்தில், அகில இந்திய தொழிற்சங்க காங்கிரசும் இதேபோன்ற மற்றொரு ஊர்வலத்தை நடத்திச் சென்றதாம். இவ்விரு மக்கட் படைகளுக்கும் முன்னர் போலீஸ் படையும் அணி வகுத்துச்சென்றதாம்.

இது, பம்பாய் மக்களின் அபரத்தை விளக்கிக் காட்டும் ஒரு நிகழ்ச்சி. மக்களுக்கு உண்ண உணவும் இருக்க இடமுமில்லை பம்பாயில். இந்நிலை மாற்றுக. இன்றேல் பதவியைவிட்டு வெளியேறுக என்று பொது மக்கள் சார்பில் அசோக்மேத்தா அரசியலாருக்கு ஆணையிட்டு விட்டார்: பம்பாயின் நிலைமையே இதுவானால், நமது சென்னை மாகாணத்தின் நிலையைப் பற்றி சொல்லவும் வேண்டுமோ! ஏற்கனவே, வடநாட்டுச் சாண்டலால் வளம் இழந்திருக்கிறது இம் மாகாணம் இந்நிலையில் சென்னையில் இட நெருக்கடியும், விலை பேற்றத்தால் விளையும் வேதனையும் நாளுக்குநாள் முற்றிக் கொண்டேபோகிறது. இதற்கு ஒரு முற்றுப்புள்ளிவைத்தாக வேண்டிய கட்டத்தில் திராவிடர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள்.

எனவே, பம்பாயைப் போல் சென்னையும் கொதித்தெழ வேண்டுமென்று எதிர்பார்க்கும் மக்களின் பிறப்புரிமைகளான உணவு, இடம் இவற்றுக்கு ஆன வழிவகைகளைத் தேடசென்னை அரசியலார் முன் வருவார்களாக. இன்றேல் பம்பாயும் தோற்றுவிடும் அளவுக்கு, திராவிடம் கிளர்ச்சி செய்யும் காலம் வரும்.

மடல்விடு தூது

டாக்டர் பி. சுப்பராயன்,
முன்னாள் அமைச்சர்,
சென்னை.

முன்னாள் அமைச்சரே, வணக்கம்.

அமைச்சர் பதவியை இழந்ததிலிருந்து தாங்கள் பதவிக்காகப் பட்டபாடுகொஞ்சநஞ்சமல்ல. ஆச்சாரியாருக்குத் துதி பாடிப் பார்த்தீர்கள்; பொது உடமைக்காரர்களையும், திராவிட இயக்கத்தையும் இடைவிடாது தாக்கிப் பேசினீர்கள்; பலமான மத்திய சர்க்கார் வேண்டுமென்று பலமாகப் பேசினீர்கள். தாங்கள் இப்படியெல்லாம் பேசித் திரிந்தபோதே நினைத்தேன், தங்களுக்கு ஒரு "சான்ஸ்" அருகிலேயே இருக்கிறது என்று நான் எதிர்பார்த்தபடியே தங்களுக்கு இப்பொழுது ஆசை நிறைவேறும்வகையில் ஒருபதவி கிடைத்திருக்கிறது. புதுவாழ்வு பெறப்போகும் இந்தோனேஷியாவில் தங்களுக்கு தூதர் பதவி கிடைத்திருக்கிறது. இப்படிப் புதுவாழ்வு பெறும் இந்தோனேஷியாவில் திராவிடராகிய தங்கட்குப் புதுவாழ்வு கிடைத்திருப்பது திராவிடர்களுக்கு மகிழ்ச்சிக்குரியசெய்தியே. இந்தோனேஷியாவின் சுதந்திர எழுச்சியைக் கண்ட பிறகேனும், திராவிடத்தின் எழுச்சியை சரியாக, தவறு என்பதை உணர்வீர்களாக.

"எழுதுகோல்"

———

சர்க்காரே :: :: ஏமாந்தது!

போகோடா, டிச. 18—

கொலம்பியாவில் மலைகள் சூழ்ந்த ஒரு கிராமமாகிய அங்கோஸ்ட்ரா என்ற இடத்தில் ஒரு பெண்ணுக்கு 5 குழந்தைகள் பிறந்திருக்கிறதென்றும், அவ்வைந்து குழந்தைகளும் உயிருடன், உடல்நலத்துடன் இருக்கிறதென்றும் ஒரு சேதி வெளியிட்ட தகவல்கள் மீது அந்தக் குழந்தைகள் விஷயம் எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்தது. அக்குழந்தைகளின் போஷணைக்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் கவனிப்பதாக சர்க்காரே முன் வந்தனர்.

சர்க்கார் அந்தக் கிராம அதிகாரிக்கு அக்குழந்தைகளைப் பற்றி தகவல்களைத் தெரிவிக்கும்படி கேட்டிருந்தனர். அந்த அதிகாரியிடமிருந்து கிடைத்த பதிலில் மேற்படி பெண் இருக்கிறாள் என்றும், அவளுக்கு 5 குழந்தைகள் இருக்கின்றனவென்றும், ஆனால் அவ்வைந்தும் ஏக காலத்தில் பிறந்தவையல்லவென்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இச்செய்தியைவெளியிட்ட கைதியின் சகோதரி அந்தப் பெண் என்றும், பிறந்த குழந்தைகளைப் பார்க்க தான் பரோலில் விடுதலை பெற வேண்டும் என்பதற்காகவே இந்த மாதிரி புரளியைக் கிளப்பியதாகவும் பின்னர் உண்மை வெளிப்பட்டது. (ரூடோப்)

வானொலி

(21-12-49 புதன்கிழமை)

சென்னை

[211·8 மீட்டர்கள்]

காலை:

7-15 தமிழில் செய்திகள்
7-30 ஆர். சியாமளாதேவி—வீணை
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 சினிமாப் பாட்டுகள் (இ.த.)
8-30 சாந்த—பாட்டு

பிற்பகல்:

12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு
1-00 மாதர் நிகழ்ச்சி
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 சினிமாப் பாட்டுகள் (இ.த.)
2-00 தமிழில் செய்திகள்
2-15 உயர்தரப்பள்ளிகளுக்கு
2-45 தூல்வகை (இசைத்தட்டு)

மாலை:

4-00 ஆரம்பப் பள்ளிகளுக்கு
5-30 கே. வி. சரோஜா—பாட்டு
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-20 சாரதா ராஜபூஷணம்—பாட்டு

இரவு:

7-00 எஸ். கல்யாணராமன்—பாட்டு
7-15 தமிழில் செய்திகள்
7-45 சி சுப்பையன் பேச்சு
8-30 எஸ். ரங்கராஜன்—பாட்டு
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 அ. இ. ரே. வித்வான்—வயலின்
9-30 வி. எஸ் சோமசுந்தரம்—புல்லாங்குழல்
10-00 தூல்வகை - (இசைத்தட்டு)
10-30 முடிவு

———

திருச்சி

[395·8 மீட்டர்கள்]

காலை:

7-15 தமிழில் செய்திகள்
7-30 கே. வி. காளிதாஸ்—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 டி. கே. பட்டம்மாள் (இ.த.)
8-50 என். சுப்பிரமணியபிள்ளை-வயலின்

பிற்பகல்:

12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு
1-00 சதம்பம் (இசைத்தட்டு)
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 எம். கே. கமலகுமாரி—பாட்டு
2-00 தமிழில் செய்திகள்
2-10 என். கே. துரைக்கண்ணு சகோதரர்கள்—நாகஸ்வரம்
2-15 உயர்தரப் பள்ளிகளுக்கு

மாலை:

4-00 ஆரம்பப் பள்ளிகளுக்கு
5-00 என். சுப்பிரமணியபிள்ளை-வயலின்
5-40 இசைப்பயிற்சி
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-15 கே. வி. காளிதாஸ்—பாட்டு
6-30 கிராம நிகழ்ச்சிகள்

இரவு:

7-15 தமிழில் செய்திகள்
7-30 சித்ரகானம் (இசைத்தட்டு)
7-45 சென்னையில் உள்ளபடி
8-00 காதம்பரி நாடகம்
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 அ. இ. ரே. வித்வான்
9-35 நீங்கள் கேட்டவை
10-30 முடிவு.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2-45, Muthumari Chetty Street, Madras-1.